Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 20 செவ்வாய்க்கிழமை (03.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 75

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

மோ.சைக்கிள் விபத்து

## படுகாயமடைந்த குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த குடும்பத் தலைவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.
இதில் உரும்பிராயைச் சேர்ந்த திருமேனி ▶23



போரிட்டவர்கள் பயங்கரவாதிகள் என்று ஒரு நபர் கூறியுள்ளார்

## மாவீரர்களின் குடும்பங்கள் அந்த நபருக்கு பாடம் படிப்பிக்கத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்

வடமராட்சி மண்ணில் நீதியரசர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)
போரிட்டவர்கள் பயங்கரவாதிகள் என்று ஒரு நபர் கூறியுள்ளார். அதைக் கேட்ட போராளிகளின் குடும்பத்தவர்கள் அனைவரும் அந் நபருக்குப் பாடம் படிப்பிக்கத் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றார்கள். அரச பயங்கரவாதமே எமது சாதுவான இளையோர்களை ஆயுதமேந்த வைத்தது என்பதை அவர் மறந்துவிட்டார் போல் தெரிகிறது. ▶23

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டது

## பொதுத் தேர்தல் ஏப்ரல் 25; காபந்து அமைச்சரவை நீடிக்கும்

ஜனாதிபதி கோட்டாவால் விசேட வர்த்தமானி வெளியீடு

**(கொழும்பு) 8ஆவது பாராளுமன்றம் நேற்று நள்ளிரவு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் கலைக்கப்பட்டது. பொதுத் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

இதன்மூலம் 8ஆவது பாராளுமன்றுக்குத் தெரிவாகிய அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் நான்கரை ஆண்டுகளுடன் நிறைவடைந்தது. எனினும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் அடங்கலான காபந்து அரசு பொதுத் தேர்தல்வரை நடைமுறையில் இருக்கும்.

9ஆவது பாராளுமன்றத்தை தெரிவு செய்யும் பொதுத் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி மார்ச் 19ஆம் திகதி வியாழக் கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைகிறது. (ம)

சஜித் பிரேமதாஸ தலைமையில்

## ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி உதயமாகியது

10 கட்சிகள், 18 தொழிற்சங்கங்கள், 20 சிவில் அமைப்புகள் இணைவு

**(கொழும்பு) 10 அரசியல் கட்சிகள், 18 தொழிற்சங்கங்கள் மற்றும் 20 சிவில் அமைப்புகளின் சங்கமத்துடன் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி உதயமாகியது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் சிலர் சமுகமளிக்காத நிலையில் புதிய கூட்டணி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.




▶04

## பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல்

அடுத்தவாரம் ஆரம்பம்

(கொழும்பு)
பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் வரும் 12ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ▶23

## சுமந்திரனின் முகத்திரை கிழிக்கப்படும் – சுரேஷ்

(யாழ்ப்பாணம்)
முகத்திரை கிழிக்கப்பட வேண்டியவர்கள் சுமந்திரன் போன்றவர்களே அன்றி தமக்கு அல்ல என்று, ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி யின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.
கல்வியங்காட்டில் உள்ள அவரது இல் லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவிய ▶23

## வீதி விபத்து குடும்பத் தலைவி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடை ▶23

## கோட்டாவின் ஆட்சியில் ஜனநாயகம் இல்லை

பிரான்ஸ் தூதுவரிடம் மாநகர முதல்வர்

(யாழ்ப்பாணம்)
நல்லாட்சியிலிருந்த ஜனநாயகம் தற்போதைய கோட்டா ஆட்சியில் காணப்படவில்லை என பிரான்ஸ் நாட்டின் தூதுவரிடம் யாழ். மாநகர ▶23

# முதலீட்டாளர்கள் வெளியேறுவதால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் அரச காப்பீட்டு பத்திரங்களில் முதலீடு செய்திருந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வேகமாக வெளியேறி வருவதால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதிக்கும் 26 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு வார காலத்தில் அரச காப்பீட்டு பத்திரங்களில் முதலீடு செய்திருந்த 11.42 பில்லியன் ரூபாயை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திரும்ப பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, 2020 பெப்ரவரி 19 ஆம் திகதி வரை அரச காப்பீட்டு பத்திரங்களில் ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 664 மில்லியன் ரூபாய் பணத்தை வெளிநாட்டினர் முதலீடு செய்திருந்தனர். அந்த தொகையானது பெப்ரவரி 26 ஆம் திகதி 91 ஆயிரத்து 240 மில்லியன் ரூபாயாக குறைந்துள்ளது.

ஒரு வார காலத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் 11 ஆயிரத்து 424 மில்லியன் ரூபாயை திரும்ப பெற்றுள்ளனர். இதனால் இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. (ம)

# பொதுத் தேர்தலில் களமிறங்கத் தயார் மாநகர முதல்வர் ஆனோல்ட்



(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடத் தயாராக இருப்பதாக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தெரிவித்தார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் அவரிடம் வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார். (ம)


## வேலையாட்கள் தேவை

தேசிய அபிவிருத்தி லொத்தர் யாழ்மாவட்டம், தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர், தீவகம் ஆகிய பிரதேசங்களிற்கு தேசிய லொத்தர் விற்பனை செய்ய விரும்புபவர்கள் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி, நலிவுற்றவர்க்கான மூன்று சில்லு துவிச்சக்கரவண்டி, மேலும் பேருந்துகளிலும் நடந்தும் சென்று விற்பனை செய்யலாம். 40 வயதிற்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.

தகுந்த வேதனம் வழங்கப்படும்.
விபரம் பேசித்தீர்க்கப்படும். (2454)

T.P : 077 603 1723 / 077 666 8125

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532


# மரண அறிவித்தல்

## சந்திரவதனா தர்மகீர்த்தி



அரச வீதி வதிரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சந்திரவதனா தர்மகீர்த்தி அவர்கள் நேற்று (02.03.2020) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வர்த்தகரான சின்னத்துரை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், தர்மகீர்த்தியின் அன்பு மனைவியும், நிந்துஜா, எழினி ஆகியோரின் அன்புத் தாயாரும், வினோத்குமாரின் அன்பு மாமியாரும் சிவசுப்பிரமணியம் (கனடா), காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சிவராஜசிங்கம் (கனடா), கமலவதனா (கனடா) ஆகியோரின் சகோதரியும் தஸ்வின், ஹவிசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரச வீதி,
வதிரி.

தகவல் : குடும்பத்தினர்
077 716 9060

(C-9394)

# நன்றியும் பாராட்டும்

மதிப்புக்குரிய

## நாகலிங்கம் வேதநாயகன்



எமது மயிலிட்டி மீள்குடியேற்றக் குழுவின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்து, உரிய அரச அதிகாரிகளுடன் கதைத்து எமது மண்ணின் விடுதலைக்கு எம்முடன் இணைந்து செயற்பட்ட எமது முன்னாள் அரச அதிபர் மதிப்புக்குரிய நாகலிங்கம் வேதநாயகன் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, அவர் நீடூழி காலம் உடல், உள சுகத்துடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மயிலிட்டி மக்களும்,
மயிலிட்டி மீள்குடியேற்ற குழுவும்

(C-9395)

# 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பு



கடந்த 03.02.2020 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது மகன்

## அமரர் விஜேந்திரம் நிதுஷன் (சரோன்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 04.03.2020 நாளை புதன்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

பற்குணா- 0774511958
துதீசன் (நிது)- 0775099552

(2448)

## 42 ஆயிரம் விண்ணப்பங்கள் ஏற்பு

# 3 நாட்களில் பிரதேச செயலகத்திற்கு தகவல் வழங்கி 7 நாட்களுக்குள் பயிற்சிக்கு முன்னிலையாக வேண்டும்

## பட்டதாரிகளுக்கு ஜனாதிபதி ஊடகப் பிரிவு விசேட அறிவிப்பு

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை அனுப்பும் நடவடிக்கை நேற்றுத் திங்கட்கிழமையுடன் நிறைவடைந்தது. அதற்கமைய இதுவரையில், 70 ஆயிரம் விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பட்டுள்ளதுடன், இதில் 42 ஆயிரம் விண்ணப்பப் படிவங்கள் தகுதி பெற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இதேவேளை நியமனம் வழங்கப்பட்டு மூன்று தினங்களுக்குள் பிரதேச செயலாளர் காரியாலயத்திற்கு தகவல் வழங்க வேண்டும் என்பதுடன், 7 நாட்களில் பயிற்சியில் முன்னிலையாகவில்லை எனின் நியமனம் இரத்துச் செய்யப்படும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## "அடிப்படைவாதத்திற்கு இலங்கையில் இடமில்லை"

# கூட்டணி நிலைப்பாட்டிலிருந்து எவரும் இனி பின்வாங்கக்கூடாது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை



(கொழும்பு)

**கூட்டணி தொடர்பான நிலைப்பாட்டிலிருந்து எவரும் இனிப் பின்வாங்கக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணிக் கட்சிகளுடனான உடன்படிக்கை நேற்றுத் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகும். எமது நாட்டில் இதற்கு முன்னர் பல்வேறு கூட்டணிகள் ஸ்தாபிக்கப்பட்டன. இவை தேர்தலை மட்டும் இலக்காகக்கொண்டு தான் ஸ்தாபிக்கப்பட்டன.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியானது அவ்வாறான தன்மை கொண்டதொரு கூட்டணி அல்ல. இதற்கு நீண்டகால செயற்பாடு உள்ளது.

இந்தக் கூட்டணி பொதுத் தேர்தல் மட்டுமன்றி, மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட எதிர்காலத்தில் நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தல்களிலும் களமிறங்கி வெற்றிபெறும்.

இன்று எமது நாட்டுக்கு புதிய பயணமொன்றின் தேவை அவசியமாகியுள்ளது. ஐக்கியமான, ஸ்திரமான, அரசியல் சுதந்திரம் கொண்ட, ஜனநாயகம் மிக்கதொரு நாட்டை நாம் உருவாக்க வேண்டும்.

இந்த நாட்டிலுள்ள அனைவரும் சமமானவர்கள் என்ற வகையில் செயற்பாடுகள் அமைய வேண்டும். இன, மத வாதங்களை நாம் முற்றாக எதிர்க்கின்றோம்.

தீவிரவாதம், அடிப்படைவாதத்திற்கு இலங்கையில் இடமில்லை. இந்தக் கூட்டணி, ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக ஸ்தாபிக்கப்பட்டதொரு கூட்டணியாகும்.

எனவே, இந்த முடிவிலிருந்து எதிர்காலத்தில் எவரும் பின்வாங்கமாட்டார்கள் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம். நாம் மக்களின் ஆணைக்கு என்றும் மதிப்பளிப்பவர்கள்.

இதற்கு எதிராக எந்தவொரு செயற்பாட்டையும் நாம் மேற்கொள்ளப்போவதில்லை. எமது இந்தப் பயணத்தில், தேசிய சொத்துக்களைக் கொள்ளையிடும் நபர்களுக்கு ஒருபோதும் இடமில்லை என்பதையும் நான் இங்கு கூறிக் கொள்கின்றேன்.

இந்த நிலைப்பாட்டில் எமது கூட்டணியின் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் உறுதியாக இருக்கிறார்கள். இந்த புதிய ஜனநாயக கூட்டணிக்கு, அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பெரும்பான்மையை பெற்றுக் கொடுக்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் வாசுதேவ வலியுறுத்து



(கொழும்பு)

விருப்புவாக்கு முறையிலே தேர்தலுக்கு செல்லவேண்டியிருப்பது துரதிர்ஷ்டவசமானதாகும். அதனால் மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் வகையில் தேர்தல் முறையை மாற்றியமைக்க அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

நடைமுறையில் இருக்கும் தேர்தல் முறையை கடந்த 5 வருடங்களில் நீக்க முடியாமல் போனது துரதிர்ஷ்டமாகும். விகிதாசார மற்றும் தொகுதி அடிப்படையில் தேர்தல் முறைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதே எமது நோக்கமாகும் என்றும் வாசுதேவ தெரிவித்தார். (இ-7)

# அமைச்சர் சந்திரசேன உட்பட 24 பேருக்கு அழைப்பாணை




(கொழும்பு)

அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன உள்ளிட்ட 24 பேரையும் எதிர்வரும் 27 ஆம் திகதியன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த அழைப்பாணையை நேற்றுத் திங்கட்கிழமை விடுத்துள்ளது. (ஐ)

# 3 நாட்களுள் கதை முடிந்தது

## இந்தியாவுக்கு மீண்டுமொரு வெள்ளையடிப்பு




ஒரே தொடரில் மூன்று ஒயிட்வாஷ். இதில் டி20யில் இந்தியா 5-0 என்று வெற்றி பெற்றதோடு சரி. பிறகு ஒருநாள் 3-0 ஒயிட்வாஷ். டெஸ்ட் போட்டிகளில் 2-0 ஒயிட்வாஷ் கொடுத்தது நியூஸிலாந்து அணி நம்பர் 1 இந்திய அணிக்கு. கிட்டத்தட்ட இரண்டரை நாட்களில் டெஸ்ட் முடிந்துள்ளது. நம்பர் 1 இந்திய அணியின் மிகப்பெரிய தொடர் உதையாக இது அமைந்தது.

நேற்று மீதமுள்ள 4 இந்திய விக் கெட்டுகளை 45 நிமிடங்களில் காலி செய்த நியூஸிலாந்து பிறகு டாம் லேதம் (52), பிளண்டெல் (55), சதக்கூட்டணி அமைக்க வெற்றிக்குத் தேவையான இலக்கான 132 ரன்களை 3 விக்கெட்டுகளை இழந்து வென்றது நியூஸிலாந்து. 120 டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிகளைப் பெற்றது. ஐசிசி தரவரிசையில் 2ம் இடத்தைப் பெற்றது. நியூசிலாந்து மட்டுமே ஒரே அணி இந்தியா தன் நம்பர் 1 இடத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்பும் என்றார் விராட் கோலி. அந்த முயற்சியில் அந்த அணியை 2ம் இடத்துக்குக் கொண்டு வந்து விட்டுள்ளார்.

இந்திய அணி தன் 2வது இன்னிங்சில் 124 ரன்களுக்கு இழந்தது. இந்திய அணிக்கு ஒரே ஆறுதல் பும்ரா 2வது இன்னிங்சிலும் அபாரமாக வீசி கேன் வில்லியம்சனை பவுன்சரில் வீழ்த்தியதும் பிறகு பிளண்டெலுக்கு அபாரமான இன் கட்டர் வீசி பவுல்டு செய்ததுமே. மெதுவே தன் பழைய பவுலிங்கிற்கு அவர் திரும்பி வருவது நல்லது. ஆனால் இப்போதைக்கு டெஸ்ட் போட்டிகள் இல்லை. ஆண்டு இறுதியில் ஆஸ்திரேலியா தொடர். இந்த முறை இந்திய அணிக்கு அவ்வளவு சுலபமல்ல. 2வது இன்னிங்சில் முகமது ஷமி 3 ஓவர்களையே வீச முடிந்தது. அவர் காயமடைந்துள்ளார். ஐபிஎல் வேறு வருகிறதல்லவா? இவர் காயத்துக்குக் காரணம் டிம் சவுத்தி பவுன்சர் ஷமி தோள்பட்டையைப் பதம் பார்த்ததே.

ஆட்டத்தின் போக்குக்கு எதிராக ரவீந்திர ஜடேஜா மிகப்பிரமாதமாக போல்ட்டை ஒரு நேர் சிக்ஸ் அடித்தார். பும்ரா 4 ரன்களில் ரன் அவுட் ஆக, ஜடேஜா 16 ரன்கள் எடுத்து நாட் அவுட் ஆனார். இந்திய அணி 124 ரன்களுக்கு ஆல் அவுட். சவுத்தி 3 விக்கெட்டுகளையும் போல்ட் 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

நியூஸிலாந்து 2வது இன்னிங்சைத் தொடங்கிய போது உமேஷ் யாதவ் தளர்வாகவீசி பவுண்டரிகளை வழங்க பும்ரா பந் து வீச்சு அதிக சிரமங்களைக் கொடுத்தது. பிளண்டெலை ஒரு ஓவரில் வீழ்த்தி விடுமாறு வீசினார், இன்சைட் எட்ஜ். பீட்டன் என்று ஆனார். இரு முறை லேதம் பும்ராவிடம் பவுல்டு ஆகியிருப்பார்.

டாம் லேதம் இந்தப் போட்டியில் தன் 2வது அரைசதத்தை எடுத்து 52 ரன்களில் உமேஷ் யாதவ் பந்தில் எல்.பி.ஆகி வெளியேறினார். கேன் வில்லியம்சனுக்கு பும்ரா வீசியது உண்மையில் திகைப்பூட்டும் பந்து ஆகும். ஆஃப் ஸ்டம்புக்கு வெளியே பிட்ச் ஆகி ஆஃப் கட்டர் பவுன்சர் போன்று வரவில் லியன்சன் பின்னால் சாய்ந்து உடலை விலக் கிக் கொண்டார் ஆனால் பந்து அவரது கிளவ்வில் பட்டு கேட்ச் ஆனது. 5 ரன்களில் அவர் வெளியேறினார்.

கடைசியில் டெய்லர், நிகோல்ஸ் தலா 5 ரன்களுடன் மேலும் சேதம் ஏற்படாமல் ஒயிட்வாஷை உறுதி செய்தனர். ஒரே தொடரில் இந்திய அணிக்கு 2 ஒயிட் வாஷ்கள்.

ஆட்ட நாயகனாக கைல் ஜேமிசன் தேர்வு செய்யப்பட்டார். தொடர் நாயகனாக டிம் சவுத்தி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## ஐக்கிய மக்கள் சக்தி...

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வானது நேற்று திங்கட்கிழமை காலை கொழும்பு தாமரைத்தடாக கலையரங்கில் இடம்பெற்றது.

“புதிய எதிர்பார்ப்பு புதிய பயணத்தை நோக்கி ஒரே எண்ணத்தில், ஒரே இலக்கில் ஒன்றாய் இணைவோம்” என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்த நிகழ்வு சர்வ மதத்தலைவர்களின் ஆசியுடன் ஆம்பமாகியது.

புதிய கூட்டணிக்கான மதத் தலைவர்களின் ஆசீர்வாதத்தை தொடர்ந்து பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வரவேற்புரை நிகழ்த்தினார். இதனை தொடர்ந்து புதிய கூட்டணிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் முன்னிலையில் பிரதான மேடையில் இடம்பெற்றது.

இதன்போது பங்காளி கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் என பல தரப்புகள் ஆதரவாளர்களின் கரகோஷங்களுக்கு மத்தியில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இதன்போது புதிய கூட்டணியுடன் 10 அரசியல் கட்சிகளும், 20 சிவில் அமைப்புக்களும் 18 தொழிற்சங்கங்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைசாத்திட்டன. (ம)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## பெறுகை அறிவித்தல்

2020ம் ஆண்டுக்கான கனரக இயந்திர இயக்குநர் சேவைகளுக்கான விலைமனுக் கோரல்

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2020ம் ஆண்டுக்கான கனரக இயந்திர இயக்குநர் சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | எதிர்பார்க்கப்படும்/ தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(15)/02/PC/04 | கனரக இயந்திர இயக்குநர் சேவை | 01 |

1)சேவை வழங்குநர்கள் கனரக இயந்திர இயக்குநர் சேவையை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

2)சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

3)சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 03.03.2020 தொடக்கம் 16.03.2020 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.2500.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

4)பெறுகை ஆவணங்கள் 17.03.2020 ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு “தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்”. என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

5)கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

க.தர்க்ஷன்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்

(c-9392)



## NSB National Savings Bank — பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 31/01/2019 ற்கு முன்பு அடகு வைக்கப்பட்டு இன்று வரை மீட்கப்படாத அல்லது புகுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 21/03/2020 தொடக்கம் 29/03/2020 வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற் பனை செய்யுப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவு திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெற உள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01. | முல்லைத்தீவு | 19/03/2020 | 21/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 02. | மல்லாவி | | | |
| 03. | கொடிகாமம் | 19/03/2020 | 21/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 04. | சாவகச்சேரி | | | |
| 05. | கிளிநொச்சி | | | |
| 06. | சுன்னாகம் | 19/03/2020 | 22/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 07. | காரைநகர் | | | |
| 08. | சங்கானை | | | |
| 09. | மானிப்பாய் | | | |
| 10. | வவுனியா | 19/03/2020 | 22/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி வவுனியா |
| 11. | நெல்லியடி | 26/03/2020 | 28/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 12. | அச்சுவேலி | | | |
| 13. | பருத்தித்துறை | | | |
| 14. | மன்னார் | 26/03/2020 | 28/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 15. | வங்காலை | | | |
| 16. | யாழ்ப்பாணம் | 26/03/2020 | 29/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |
| 17. | யாழ்ப்பாணம், 2ம் கிளை | | | |
| 18. | ஊர்காவற்றுறை | | | |
| 19. | திருநெல்வேலி | | | |
| 20. | கோப்பாய் | | | |

(2449)

## புதிய கட்சியை ஆரம்பித்தால்

# வீதி வீதியாக அலைய விடுவோம் என்றவர்கள்

# மகிந்த தலைமையிலான கூட்டணியில் அங்கம்



### மைத்திரியை சீண்டிய நாமல்



(கெஸ்பேவை)

**புதிய கட்சியை ஆரம்பித்தால், வீதி வீதியாக அலைய விடப் போவதாகக் கூறியோர் தற்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிப்பதாகவும் இது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கெஸ்பேவையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஸ்ரீல ங்கா பொதுஜன பெரமுனவின் அதிகாரசபைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அம்பாந்தோட்டை மாவட் டத்தில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின்ரை கைவிட்டு கொழு ம்புக்கு செல்லாது, அம்பாந் தோட்டையிலேயே இருக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் கோரிக்கை விடுப்பதாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனியாகப் பிரிந்து சென்று ஸ்ரீல ங்கா பொதுஜன பெரமு னவை ஆரம்பிக்க முயற்சித்த போது, அன்றைய ஜனாதிபதியும் ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியின் தலை வருமான மைத்திரிபால சிறிசேன, புதிய கட்சியைத் தொடங்கினால், வீதிவீதியாக அலை யவிடப் போவதாகக் கூறியிருந்தார். ஆனால், அவரும் இப்போது எமது அணியில் அங்கம் வகிக்கிறார் என நாமல் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இராணுவ ஆட்சிக்கு முகம் கொடுக்க

# கூடுதல் பலத்துடன் பாராளுமன்றம் செல்ல வேண்டும்

### சுமந்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு



(கரணவாய்)

இராணுவ ஆட்சி வந்திருப் பது பாரிய சவால் அதற்கு நாங் கள் முகம் கொடுக்கப் போகின் றோம் இதற்கு முகம் கொடுப்ப தாக இருந்தால் ஏற்கனவே பாராளுமன்றத்திலே இருந்ததை விட கூடிய பலத்தோடு நாம் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கடந்த நான்கரை வருடங் களில் கடந்து வந்த சமகால அரசியல் ஆய்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சந்தி பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில்,

இனவாதத்தை அடிப் படைவாதத்தை ஊட்டி சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் ஒரு பெரும் பயத்தை உருவாக்கி அதன் மூலமாக ஆட்சிக்கு வந் திருப்பவர்கள் 19 ஆம் திருத்தச் சட்டத்தை அகற்ற வேண்டும் என விரும்புகிறார்கள்.

இராணுவ ஆட்சியை ஏற்ப டுத்த வேண்டாம் என்பதே அவர் கள் குறிக்கோள். ஏற்கனவே இராணுவ ஆட்சியை ஏற்படுத்தி விட்டார்கள். வீதிப் போக்கு வரத்து புகையிரத கடவை களிலும் திணைக்கள தலை வர்களாகவும் இராணுவத்தினர் இருக்கின்றனர்.

தேர்தல் முடியும் வரை அவர்கள் அடங்கி இருப்பார்கள் என்று நினைத்தோம் அது அவர் களால் முடியாது இருக்கிறது. அவரின் குணாதிசயம் அப்படி. இராணுவ ஆட்சி வந்திருப்பது பாரிய சவால். அதற்கு நாங்கள் முகம் கொடுக்கப் போகின் றோம்.

இதற்கு நாங்களும் இந்த நாடு முகம் கொடுக்கப்போகிறது. இதில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவது நாங்கள்தான். அதற்கு முகம் கொடுப்பதாக இருந்தால் ஏற்கனவே பாரா ளுமன்றத்தில் இருந்த பலத்தை விட கூடிய பலத்தோடு ஒரு அணி யாக நாங்கள் பாராளு மன் றத்துக்குச் செல்ல வேண்டும்.

இதில் எந்த விதமான மாற்று சிந்தனைகளுக்கும் இடம் கொடுக்க முடியாது. இது ஒரு அடிப்படை யான பிரச்சினை. நாட்டில் ஜன நாயக பலத்தை பெற வேண்டு மாக இருந்தால் முத லிலே அந்த எண் ணிக்கையை அதி கரிக்க வேண்டும்.

வடக்கு-கிழக் கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தாங்கள் ஒன்றாக ஒரு அரசியல் பல மாக இருக்க வேண்டும் என விரும்பினால் நாங்கள் அதற்குத் தடையாக இருக்க மாட்டோம். ஆனால் எந்த அடிப்படை யில் வடக்கு- கிழக்கு மாகாண ங்கள் இணை வது. இணை வதாக இருந்தால் சில நிபந்தனைகளின் அடிப் படையில் அது செய்யப்பட வேண்டும். வடக்கு-கிழ க்கு இணைப்பை ஏற்படுத்த வேண்டுமாக இருந் தால் அது முஸ்லிம் மக்க ளின் இணக்கத்துடனே ஏற்படு த்த முடியும். அதை மன தில் வைத்து தான் நாங்கள் எப்பொழுதுமே செயற்பட் டுக் கொண்டிருக் கின்றோம் என அவர் மேலும் தெரி வித்தார். (இ-60)

## உடுவில் பிரதேச செயலாளராக முகுந்தன் நியமனம்



(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலா ளராக தவச்செல்வம்.முகுந்தன் நியமிக்கப்பட்டார்.

உடுவில் பிரதேச செய லாள ராகக் கடமையாற்றிய சி.ஜெயக்காந்தன் புதுக்குடி யிருப்புப் பிரதேச செயலா ளராக பணி இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் குறித்த நியமனம் வழங்கப்பட் டது. (இ-10)

1ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10 – 04 – 1936



இறப்பு 13 – 02 – 2019

அமரர்.பொன்னுத்துரை சந்திரசேனா

அன்பின் திருவுருவே! எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டு ஒன்றல்ல ஓராயிரம் ஆகலாம்! காலங்கள் விடைபெறலாம்!
நெஞ்சில் பதித்த நினைவலைகள் என்றும் நம்மைவிட்டு நீங்காது...!

மான்ஸ் பாடசாலை வீதி, டச்சு றோட், உடுவில்
தொ.இ- 077 923 5571

(C-9391)

பிரிவால் துயருறும் மனைவி ,பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள் .

# நீதி கிடைக்க உதவுங்கள்

## முன்னாள் ஆளுநரிடம் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடமாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை வடமாகாண சுகாதார சேவை உதவியாளர் (தரம்III) பதவிக்கு நியமனம் பெற்றுக் கடமையை பொறுப்பேற்க விடாது தடுக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள் கடந்த 29ஆம் திகதி யாழில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் போது . வடமாகாணத்தில் ஆளுநராகப் பணியாற்றிய காலப்பகுதியில் வடமாகாண சுகாதார சேவை உதவியாளர் (தரம் III) பதவிக்கு நியமனம் பெற்று (நவம்பர் 18) கலாநிதி சுரேன் ராகவன் ஆளுநர் பதவியிலிருந்து விலகிய பின்னர் வடமாகாண அதிகாரிகளால் கடமையைப் பொறுப்பேற்க விடாது தடுக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைப்பதற்கு உதவுமாறு கோரிக்கை விடுத்தனர்.

தேர்தல்கள் ஆணைக்குழு தலைவரின் அனுமதி பெறப்பட்ட பின்னர் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதம செயலாளரின் முறையான அனுமதியின் பின்னர் மேற்படி நியமனங்கள் அப்போதைய ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனால் வெளிப்படைத் தன்மையாக இடம்பெற்ற நேர்முகத் தேர்வுகளுக்கு பின்னர் அனுமதி வழங்கப்பட்டு 389 பேருக்கான நியமனக் கடிதங்கள் கடந்த நவம்பர் மாதம் 18 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது.

மேற்படி நியமனம் பெற்ற 389 பேரும் 2019 நவம்பர் 25ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்குமாறு கோரப்பட்டு தத்தமது பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளுக்கு சென்ற போதிலும் பிரதம செயலாளர் தொலைநகல் மூலம் அறிவுறுத்தியதன் பேரில் இவர்களை கடமையைப் பொறுப்பேற்க வேண்டாமென கோரப்பட்டதென்றும் அதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படாததுடன் இன்றுவரை தாம் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கான எந்தவித நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை எனவும் தமக்கு இதற்கான தீர்வினைப் பெற்றுத்தர வேண்டுமென்று பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குறிப்பிட்ட சுரேன் ராகவன் அடுத்த கட்டமாக ஜனாதிபதியையும் சந்தித்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (இ-7)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு தொடர்-2 ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிவநெறிச்செம்மல் சைவப்புலவர் பொன் சந்திரவேல் "உதித்தனன் உலகம் உய்ய" எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார். (இ-7)

# சாயி கணேசருக்கு ஆராதனை

(யாழ்ப்பாணம்)

சாயி கணேசருக்கு விசேட ஆராதனை நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் யாழ்.சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறும். (இ-2)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## திருநீற்று மகிமை

சிவ வழிபாட்டில் திருநீறு அணிவது முக்கியமான கடமையாகக் கருதப்படுகின்றது."நீறில்லா நெற்றி பாழ்" என்பர் பெரியோர். சிவபெருமான் தன் நெற்றியில் திருநீறு அணிந்திருப்பதாக திருமந்திரத்தில் திருமூலர் கூறுகிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சிவபெருமான் தன் நெற்றியில் திருநீறு தரித்துள்ளதாகக் கூறுகின்றார். எனவே திருநீறு சிவ சின்னங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

திருநீறு அணியும் வழக்கம் சிவ பக்தர்களிடம் பன்நெடுங்காலமாக இருந்து வருகின்றது. ஆதியில் சுடுகாட்டு சாம்பலே திருநீறாக அணியப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இன்றளவும் சில வடநாட்டு சிவாலயங்களில் சுடுகாட்டுச் சாம்பல் திருநீறாகப் பயன்படுத்தப்படுவதை அறிய முடிகிறது.

அவரைச் செடியில் பூச்சி வராமல் தடுக்க அடுப்புச் சாம்பலைத் தூவுவதை நாம் இன்றும் கண்கூடாகப் பார்க்கலாம். சாம்பல் ஒரு கிருமிநாசினி என்பதை இதன்மூலம் அறிய முடிகிறது. வாய் துர்நாற்றத்தைப் போக்குவதற்கும், பற்களைப் பாதுகாப்பதற்கும் அடுப்புச் சாம்பலையே பற்பொடியாக இன்றளவும் பயன்படுத்தி வருகின்றோம். சமையல் பாத்திரத்தைச் சுத்தப்படுத்துவதற்கு அடுப்புச் சாம்பலையே பயன்படுத்தினார்கள் நம் முன்னோர்கள். குறிப்பாக ஈயம் பூசிய பித்தளைப் பாத்திரங்களை சாம்பல் கொண்டு பூசினால் நச்சுத்தன்மை நீங்கும் என்ற காரணத்தினால் நம் முன்னோர்கள் அதனைப் பயன்படுத்தினார்கள்.

எரிந்த கரித்துண்டு, பானையோடு இவைகளைக் கையில் வைத்திருப்பவர்களை மந்திரவாதிகளால் எதுவும் செய்ய முடியாது. இதனை என் சொந்த அனுபவத்தில் உணர்ந்திருக்கின்றேன். இதன் மூலம் நாம் அறிந்து கொள்வது என்னவென்றால் நெருப்பில் பூத்த திருநீறை தினமும் தவறாது நெற்றியில் அணிந்து வந்தால் ஏவல், பில்லி, சூன்யம் இவைகளால் யாரும் நம்மைத் துன்புறுத்த முடியாது. எனவே திருநீறு ஒரு நல்ல கவசமாகும்.

சாதாரண அடுப்புச் சாம்பலுக்கே அளவிட முடியாத ஆற்றல் இருக்கின்றது என்றால், முறையாகத் தயாரிக்கப்பட்ட திருநீறு எவ்வளவு ஆற்றல் உடையதாக இருக்க வேண்டும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். (தொடரும்)

# சிறுகதை நூல்வெளியீடு



(கொடிகாமம்)

மிருசுவில் தமிழ்தாசனின் "சிந்தை மகிழ" நகைச்சுவை சிறுகதைகள் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் ஐ.தேவஈஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் திருமதி சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தன், சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் திருமதி சிவகங்கை இராமநாதன், கௌரவ விருந்தினர்களாக மீசாலை கிராம உத்தியோகத்தர் என்.கௌரிதரன், லயன்ஸ் கழகச் செயலாளர் கோகுலன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-114)

# இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மேடம்:** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் கூடும், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்:** எந்தவொரு வேலையையும் நாளை எனத்தள்ளி வைக்காமல் இன்று செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்கலாம், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது அவசியம், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**கும்பம்:** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், செய்தொழிலில் எதிர்பார்த்த நற்பயன் கிடைக்கும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

**கடகம்:** வருமானம் பெருகி வளம் காணும் நாள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்கள் செல்லப்போட்ட திட்டங்கள் கைகூடும்காரிய அனுகூலமுண்டு

**மகரம்:** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** புதிய தொழில் தொடர்பாக தீட்டிய திட்டங்கள் வெற்றி தரும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆரோக்கியமான நாள், காரியசித்தி உண்டு.

**இராசி பலன் — கிரகநிலை**

சுக் | சந் | ராகு | சூரி | புத | சனி, கேது, குரு, செவ்

சந்திராஷ்டமம் விசாகம்

**03.03.2020**

மாசி 20,செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

அட்டமி முற்பகல் 9.34 மணிவரை

ரோகிணி காலை 6.41 மணிவரை

சுபநேரம் 10.56-12.26 மணிவரை

இராகுகாலம் 3.26-4.56மணிவரை

கச்சியப்ப சிவாச்சாரியார் குரு பூசை

இன்பமும் கனிப்பும் மிகுந்த நாட்கள் நீண்டவையல்ல. வளவன்

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாகச் செயற்படுவர், கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** உறவினர்களின் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்.

**துலாம்:** பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறுதடை தாமதங்கள் ஏற்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**கன்னி:** பற்றாக்குறை தீர்ந்து பண வரவு கிடைக்கும் நாள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

# இலங்கையில் நடந்த அபூர்வ சத்திரசிகிச்சை

(காலி)

காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் உயிருக்குப் போராடிய ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவருக்கு அபூர்வ சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. கராப்பிட்டிய வைத்தியசாலையின் சிறுநீரகம் மற்றும் நரம்பு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் ரஞ்ஜீக உம்பேசிறி தலைமையிலான குழுவினரால் சிறுநீரகம் பொருத்தும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

நன்கொடையாளரிடமிருந்து கிடைத்த சிறுநீரகம் இவருக்கு பொருத்தப்பட்டது. இரண்டு மணி நேரங்களில் சிறுநீரகம் பொருத்தும் சத்திரசிகிச்சை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. எனினும் சத்திரசிகிச்சையைத் தொடர்ந்து சிறுநீரக நரம்பு வழியாக இரத்தம் வெளியேறத் தொடங்கியது. இந்நிலையில் நோயாளிக்கு இரத்தப்போக்கு ஏற்படாமல் தடுக்க வைத்திய குழுவினர் நடவடிக்கை எடுத்தனர்.

சிறப்பு அறுவைச் சிகிச்சை நிபுணர், மாற்றப்பட்ட சிறுநீரகத்தை தமனிகள் மற்றும் நரம்புகளிலிருந்து பிரிக்கத் தொடங்கினார். பின்னர் நோயாளியின் காலில் ஒரு நரம்பு எடுத்து, அதனை இரண்டாகப் பிரித்து மீண்டும் சிறுநீரகம் பொருத்தப்பட்டு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய நிலைமைகள் மிகவும் அரிதானவை எனத் தெரிவித்த சிறப்பு அறுவை சிகிச்சை நிபுணர், நரம்பு திரும்பியவுடன், நோயாளியின் சிறுநீரகம் மீண்டும் இயங்கியதுடன் அவர் உயிருடன் இருப்பது அதிர்ஷ்டம் எனத் தெரிவித்தார். (இ-7)

# போதைப்பொருள் கடத்தல் உள்ளக வேலை நிறுத்தங்கள் பிரதான சவால்களாகும்

## பாதுகாப்புச் செயலாளர் பட்டியல்



(கொழும்பு)

எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாக பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீவிரமயமாக்கல், பயங்கரவாதம் மீள் எழுச்சி, பிரிவினைவாதம், மத தீவிரவாதம், திட்டமிடப்பட்ட குற்றச்செயல்கள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் உள்ளக வேலை நிறுத்தங்கள் என்பன பிரதான சவால்களாக காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அரசாங்கம் தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ)

# எங்களிடம் சுவரில்லை சித்திரம் கீற முனைகின்றனர்

## பேராசிரியர் கந்தசாமி சுட்டிக்காட்டு



(குப்பிழான்)

இன்றைய இளைஞர்கள் கணிதமும், விஞ்ஞானமும் கற்றால் தாம் எந்த நிலையையும் அடைய முடியுமெனவும் சமாளிக்க முடியுமெனவும் எண்ணுகிறார்கள். எங்களிடம் சுவரில்லை. சித்திரம் கீற முனைகின்றார்கள். எங்கள் சமயத்தின் ஊடாக வெளிப்படும் நெறிகளை கற்காமல் இளைஞர்கள் பலவிதமான பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்தார்.

ஒரு மனிதனை முழுமையான மனிதனாக மாற்றுவதற்காக உருவாக்கப்பட்டவை தான் இராமாயணம், மகாபாரதம் போன்ற பெரும் இதிகாசங்களாகும். இந்த இதிகாசங்களை நாம் கற்றுப் பொருள் விளங்கினோமானால் வாழ்வில் எந்தச் சந்தர்ப்பத்திற்கும் முகம் கொடுக்க முடியுமென்பதை நான் பலவிடங்களிலும் அவதானித்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திய யாழ்.கம்பன் விழா கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில் ஆரம்பமானது. இந்த விழாவில் கலந்து கொண்டு தொடக்கவுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வசிட்டர் இராமருக்குப் பட்டம் சூட்டுவதற்கு முன்னர் தசரதனின் கட்டளையை ஏற்று ஒரு அரசை எவ்வாறு நீ நடத்த வேண்டும்? யாருடைய அறிவுரையை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்? என்றெல்லாம் அறிவுரை கூறுகிறார். உன்னிடத்தில் சிவ பெருமானுக்குரிய வலிமையிருந்தாலும் விஷ்ணுவுக்குரிய ஆற்றலிருந்தாலும் பிரம்மாவுக்குரிய பக்குவமிருந்தாலும் உன்னுடைய அமைச்சரின் சொற்படி நீ செயற்பட வேண்டுமெனவும் அவரது அறிவுரை அமைந்துள்ளது. அதேபோன்று நாங்கள் எந்தப் பதவியிலிருந்தாலும் எமக்கு மேலானோரின் அறிவுரைகளைக் கேட்டு நடக்க வேண்டும்.

பாலித் தீவிலுள்ளவர்கள் தாம் வீமனின் வாரிசுகள் என்று கூறுவார்கள். பல பிரதேசங்களிலும் நாடுகளிலும் இராமாயணம் பலவிதமாகக் கூறப்படுகிறது. இதனை நான் கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் ஏனைய பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் சேர்ந்து இந்தோனேசியா சென்ற போது தெரிந்து கொண்டேன்.

எனினும், இராமாயணக் கதை முழுவதும் தெரியாமல் முடிச்சுப் போட முடியாது. அவர்களையெல்லாம் கவர்ந்தெடுத்து நல்ல சுவர்களை நாம் உருவாக்குவாமோனால் பிற்காலத்தில் எங்கள் பெயர்களை சொல்லக் கூடிய நற்சமுதாயத்தை உருவாக்க முடியும். அத்தகைய செயற்பாட்டைக் கம்பன் கழகம் மிகவும் வினைத்திறனுடன் செய்கின்றது.

அவர்களது செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற வேண்டும். யாழ்ப்பாணத்தில் சந்திக்கு சந்தி நின்று வீண் பொழுது போக்குபவர்களை இழுத்தெடுத்து, செதுக்கி சிறந்தவர்களாக உருவாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-18)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 169cm<br>தகைமை/தொழில்: B.Tech. படவரைஞர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் செய்யும் பெண்<br>தொ.இ: B/10586 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: செவ் 2 இல்<br>எதிர்பார்ப்பு: சிறிய அரசதொழில், வியாபாரம்<br>தொ.இ: G/7322 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 50 ½ செவ் 6 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: B.Sc Quantity Surveying Quantity Surveyor<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகள்<br>தொ.இ: B/10587 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: செவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த. உ.த<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7324 |
| பிறப்பு: 1992 கிறிஸ்தவம் (RC)<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: செவ் 9 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: வங்கி ஊழியர்<br>எதிர்பார்ப்பு: படித்த நல்ல வேலையிலுள்ள பெண்<br>தொ.இ: B/10588 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: - செவ் 6 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: M.Sc (Moratuwa)<br>எதிர்பார்ப்பு: அரசு தனியார் உத்தியோகம்.<br>தொ.இ: G/7327 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 24 ½ செவ் 12 இல்<br>உயரம்: 6"<br>தகைமை/தொழில்: Charted Accountant, எக்கவுண்டன்ற்.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண். வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10589 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 20 3/4 செவ் 6 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: M.BA வங்கி ஊழியர்.<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச, அரச சார்பற்ற துறையில் வேலை<br>தொ.இ: G/7329 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9249)

ரெங்கசாமி கண்டி, அம்பத்தன்ன - 077 112 3471 Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்களைப் பெறும் அனைத்துத் திறனும் ஐ.தே.கவிடம் உள்ளது



## தயா கமகே திட்டவட்டம்

(கண்டி)

**நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய அனைத்துத் திறனும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கின்றதென நாடாளுமன்ற உறுப்பினர் தயா கமகே தெரிவித்தார்.**

கண்டியில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "புதிய கூட்டணியை வழி நடத்தும் பொறுப்பு சஜித் பிரேமதாஸவிடம் வழங்கப்பட்டது. எனவே அந்தப் பொறுப்பை உணர்ந்து அவர் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும்.

அந்த வகையில் நாளைய தினம் தேர்தலொன்று நடைபெறுவதாக இருந்தாலும் கூட அதனை எதிர்கொள்வதற்கு எமது கட்சி தயாராகவே இருக்கின்றது.

மேலும் இந்தக் கூட்டணியின் சின்னமாக யானை சின்னம் இருக்க வேண்டுமென பெரும்பாலான உறுப்பினர்கள் விரும்புகின்றனர். ஒரு சிலர் மாத்திரமே அன்னம் சின்னத்தில் போட்டியிட வேண்டும் எனக் கூறுகின்றனர்.

இதேவேளை நான் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடவுள்ளேன். ஐக்கிய தேசியக் கட்சி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மாத்திரமே கொழும்பு மாவட்டத்தில் தோல்வியைத் தழுவியது.

மேலும் நாடாளுமன்றில் 113 ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அனைத்துத் திறனும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கின்றது.

இதேவேளை தற்போதைய அரசாங்கம், ஆட்சிபீடம் ஏறி, குறுகிய காலத்திற்குள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறது.

அதாவது தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் நம்பிக்கையுடன் வாக்களித்த போதிலும் இன்று அரசாங்கம் மந்தகதியிலேயே செயற்படுகின்றது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகின்றது. அரச அதிகாரிகளுக்கு அவர்களின் சம்பளத்தை வழங்க முடியவில்லை. இத்தகைய நெருக்கடியிலிருந்து நாட்டை வெளியே கொண்டு வருவதற்கான எந்தத் திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் தெளிவூட்டல் உரையரங்கு







(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் யாழ் - மாவட்ட உறுப்பினர்களுக்கான சமகால அரசியல் "தெளிவூட்டல் உரையரங்கு" நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் துணைப் பொதுச் செயலாளர் சன் தயாளன் தலைமையில் இடம்பெற்ற இவ்வுரையரங்கில் "ஜெனிவா-உண்மைகளும் மாயைகளும்" என்ற தலைப்பில் அரசியல் கருத்தியலாளர் நிலாந்தன், "ஊடகங்கள் சொல்லும் அரசியலைப் புரிந்து கொள்ளல்" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சி ரகுராம் வழிவரை படம் இல்லாத "தமிழ்த் தேசிய அரசியல்" என்ற தலைப்பில் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் ஆகியோர் உரையாற்றினர்.

இவர்களுடன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக உரையாற்றியிருந்தார். (இ-7)





**தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளவாலை வடமேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வசந்தபுரம்-நாதோலை கிராமத்துக்கான புதிய வீதிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டார்.**

## எந்தப் பிளவுகளும் இல்லை

# பொதுத்தேர்தலில் ஐ.தே.க யானை சின்னத்தில் போட்டி

## ரவி கருணாநாயக்க உறுதி



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி யானை சின்னத்தில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம் பெற்ற விசேட கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி யானை சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எந்தப் பிளவுகளும் இல்லை. யானை சின்னத்தில் போட்டியிட வேண்டும் என பெரும்பாலானவர்கள் விரும்புவதால், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் யானை சின்னத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய வேட்புமனு சபையும் தயாராக இருப்பதாக ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழரசுக் கட்சி கூட்டத்தில் சுரேன் ராகவன் பங்கேற்பு




(கரணவாய்)

வடமராட்சியில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து கொண்டிருந்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலைசந்தி பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் "கடந்த நான்கரை வருடங்களில் கடந்து வந்த பாதை" தொடர்பான கருத்தரங்கு இடம் பெற்றது.

இதிலேயே முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் கலந்து கொண்டிருந்தார். (இ-60)



அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திய யாழ்.கம்பன் விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெற்றது.
(படங்கள்:- ஐ.சிவசாந்தன், செ.ரவிசாந்)

# பட்டமளிப்பு விழா நாளை

(கொழும்பு)

நோத்லங்கா IIT கம்பஸ் இல் பட்டப்படிப்புகளை மேற்கொண்டவர்களுக்கான பட்டமளிப்பு விழா நாளை முற்பகல் 10 மணியளவில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெறும். இப்பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வார். இதில் 184 பேர் பட்டம் பெறவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# கொரோனா வைரஸ் தொற்று
# கட்டுநாயக்கவில் விசேட சோதனை

(கொழும்பு)

இத்தாலியில் இருந்து இலங்கைக்கு வரும் பயணிகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசேட சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய இந்தத் திட்டம் நேற்றுத் திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படுவதாக சுகாதார அமைச்சின் பிரதான தொற்று நோயியல் நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அத்துடன் அவர்களை 14 நாட்களுக்குத் தொடர்ந்து கண்காணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


இதேவேளை, தென்கொரியாவில் இருந்து நேற்று முன்தினம் இலங்கைக்கு வந்த பயணிகள் எவருக்கும் நோய் அறிகுறிகள் தென்படவில்லை என விமான நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தென்கொரியாவில் இருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 256 பயணிகளுடன் கொரியன் விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தது.

அத்துடன் சீனாவின் ஷங்ஹாய் நகரில் இருந்து இலங்கை வந்த 132 பயணிகளும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட பிரிவின் ஊடாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

எனினும் அவர்களுள் எவருக்கும் நோய் அறிகுறிகள் தென்படவில்லை என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

# வாழ்வாதார உதவிகள் வழங்கல்





(புதுக்குடியிருப்பு)

யாழ்.எய்ட் அமைப்பால் பொருளாதார நிலையில் பின்தங்கி கஷ்டத்துடன் வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் அண்மையில் புதுக்குடியிருப்பில் வைத்து வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. (இ-7)

# குண்டுத்தாக்குதலுடன் தொடர்பு; 12 பேருக்கும் மீள மறியல் நீடிப்பு

(கல்முனை)

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதானோரில் 12 பேரை மீண்டும் எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டது.

குறித்த வழக்கு கல்முனை நீதிமன்ற நீதவான் ஐ.என். றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு இரு வேறு சந்தர்ப்பங்களில் நேற்றுத் திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்படி விசாரணைக்காக வந்த சந்தேகநபர்கள் அனைவரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் பாதுகாப்புத் தரப்பினர்களால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பல மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இந்தச் சந்தேகநபர்கள் தொடர்பான பிணை கோரிக்கை குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் கவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அதேவேளை நேற்று பொலிஸாரின் ஆட்சேபனை காரணமாக அனைத்து சந்தேகநபர்களதும் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டு இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வாறு கைதான சந்தேகநபர்கள் அனைவரும் காத்தான்குடி, கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தாய், தந்தை, மகள், மகன் உட்பட ஆறுபேர் விபத்தில் படுகாயம்

(குருநாகல்)

குருநாகலில் இடம்பெற்ற விபத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த குடும்பத்தினர் படுகாயம் அடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் தாய், தந்தை, மகன், மகள், சாரதி மற்றும் பயண வழிகாட்டியும் காயமடைந்து தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து சிகிரியாவிலுள்ள சுற்றுலா ஹோட்டல் நோக்கிப் பயணித்த போதே இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். பிரான்ஸில் இருந்து இலங்கை வந்தவர்களே விபத்தில் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறை தொடர்கிறது

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு



(நெளுக்குளம்)
இந்த அரசாங்கத்திலும் ஊடகவியலாளர் மீதான அடக்குமுறை தொடர்வதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து பொது அமைப்புக்களுக்கான உபகரணங்களை வழங்கி வைத்த பின்னர் உரையாற்றும் போதே மேற்படி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஊடகவியலாளர்கள் மீதான கடத்தல்களும் கைதுகளும் தற்போதும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

கடந்த யுத்த காலத்திலும் கூட 35 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கான நீதி இதுவரை கிடைக்கப்பெறவில்லை. கடந்த நான்கரை வருடகாலமாக நல்லாட்சி அரசின் ஆட்சிக்காலத்திலும் கூட கடந்த அரசாங்கத்தினால் கொலை செய்யப்பட்ட 35 ஊடகவியலாளர்களின் விசாரணைகள் நடைபெறவில்லை. ஆகவே இந்த நல்லாட்சிக்கு ஆதரவு வழங்கிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் கூட அவர்களுக்கான நீதி பெற்றுக் கொடுக்கப்படவில்லை. தொடர்ந்தும் அதே நிலைமைதான் நீடித்துக்கொண்டு இருக்கிறது. ஆகவே அரசாங்கம் ஊடக சுதந்திரம் வழங்கப்பட்டதாகவும் அவர்களை சுதந்திரமாக எழுதுவதற்கும் பணி யாற்றுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குவதாக தெரிவித்த போதிலும் ஊடகவியலாளர்கள் மீதான கைதுகளும் விசாரணைகளும் தொடர்ந்து கொண்டு இருப்பதை அனுமதிக்க முடியாது.

ஆகவே ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்றுவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மேலும் தெரிவித்தார். (9-299)

## உபகரணங்கள் வழங்கல்



(நெளுக்குளம்)
பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட 4.5 மில்லியன் ரூபாய் நிதியின் கீழ் பதிவு செய்யப்பட்ட 11 அமைப்புக்களுக்கான உபகரணங்கள் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனால் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் கமலதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொது அமைப்புக்களை சேர்ந்த உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-299)

# பொலிஸ் சேவை ஆட்சேர்ப்புக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து குறைந்தளவு விண்ணப்பங்கள்

(முறிகண்டி)
பொலிஸ் சேவை ஆட்சேர்ப்புக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து மிக குறைந்த விண்ணப்பங்களே கிடைத்துள்ளதாகவும் இளைஞர், யுவதிகள் துணிச்சலுடன் விண்ணப்பிக்குமாறு கிளிநொச்சி பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பாடல் பிரிவின் பொறுப்பதிகாரி ஆர்.ஏ. ஜெகத்குமார கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்பிற்கமைவாக பொலிஸ் உத்தியோகத்தர்களை சேவைக்கு இணைக்கும் நோக்குடன் நாடு முழுவதும் ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அந்த வகையில், பொலிஸ் கொஸ்தாபல், பெண் பொலிஸ் கொஸ்தாபல் ஆகிய பதவி நிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் அவசர ஆட்சேர்ப்புக்கான நேர்முகத்தேர்வு மற்றும் நியமனம் அந்தந்த மாகாணங்களிலேயே இடம்பெறும் என்பதுடன் பயிற்சிக் காலத்தில் வேதனம் வழங்கப்படும் எனவும் ஆட்சேர்ப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் 1800 தமிழ் மொழி மூலமான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக காணப்பட்டுள்ளதாகவும் வேலை வாய்ப்பிற்காக காத்திருக்கும் 18 முதல் 28 வரை வயதெல்லை கொண்ட திருமணமாகாத இளைஞர், யுவதிகள் விண்ணப்பங்களை பெற்று தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

இந்த நிலையில் வடக்கில் காணப்படும் தமிழ் உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் பொலிஸ் சேவையை விரிவுபடுத்துவதற்குமான அவசர ஆட்சேர்ப்பில் ஆர்வம் உள்ளவர்களும் அரச வேலை வாய்ப்பிற்காக காத்திருப்போரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்களை கிளிநொச்சி பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பாடல் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

மாகாணத்திலும் மாவட்டத்திலும் தற்போது காணப்படும் குற்ற செயல்கள், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்டவற்றை கட்டுப்படுத்துவதற்கும் மக்களுக்கான பாதுகாப்பு மற்றும் சேவைகளுடன் நாட்டின் சட்டத்தை பாதுகாக்கவும் நடைமுறைப்படுத்தவும் பொலிஸ் சேவையில் இணைந்து பணியாற்ற கிளிநொச்சி மாவட்ட இளைஞர், யுவதிகள் முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-100)




# சட்டவிரோத மரக்கடத்தல் முறியடிப்பு




(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு உடையார்கட்டு நஞ்சுண்டான்குள காட்டுப்பகுதியில் பாரிய மரக்கடத்தல் ஒன்று முல்லைத்தீவு வட்டார வன திணைக்களத்தினரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இந்த மரக்கடத்தல் சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றிருந்தவேளை வன திணைக்களத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு உழவியந்திரம் ஒன்றில் கடத்தப்பட்ட பெறுமதியான மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது மரக்கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு மூவர் தப்பியோடியுள்ளனர்.

இதில் ஆறு இலட்சம் ரூபாய் பெறுமதியிலான முதிரை மரத் துண்டங்கள், பலகைகள், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட உழவியந்திரம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. மிக நீண்டநாட்களாக வனப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த இந்த சட்டவிரோத மரக்கடத்தல் தொடர்ச்சியாக முல்லைத்தீவு வட்டார வன திணைக்களத்தினரால் அவதானிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளது. (9)

# சேதமடைந்துள்ள முல்லை.சங்கிலிப் பாலம்

## சிரமத்துடன் பயணம் செய்யும் மக்கள்



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு நகரப் பகுதியை அண்மித்துக் காணப்படும் சங்கிலிப் பாலம் கடந்த சில வருடங்களுக்கு மேலாக பாதிப்படைந்த நிலையில் உள்ளதால் போக்குவரத்து செய்வதில் தாம் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த பாலத்தினை சீரமைப்பதற்கு தாம் உரியவர்களிடம் நிதி கோரியிருப்பதாகவும் அதற்குரிய நிதி கிடைக்கப் பெற்றால் பாலத்தினை சீரமைப்பு செய்ய முடியுமெனவும் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த சங்கிலிப் பாலமானது முல்லைத்தீவு - பரந்தன் பிரதான வீதியில் முல்லைத்தீவு நகரை அண்மித்து காணப்படுகின்றது.

இப்பாலம் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட பாலமாகும். குறித்த பலமானது கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் பாலத்தின் இரு புறமும் வீதித்தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை பாலத்தின் அருகே சிறியதொரு பாதை தற்காலிகமாக அமைக்கப்பட்டு மக்கள் பலத்த சிரமங்களுடன் அப்பாதையினைப் பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக மழை காலங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள வீதிக்கு மேலால் இரண்டு அடிக்கு வெள்ளநீர் மூடிப்பாயும். இதனால் குறித்த வீதியினால் பயணிக்க முடியாத நிலையும் ஏற்படும். அதேவேளை பிரதான வீதியில் அமைந்துள்ள மிக முக்கியமான பாலமாகவும் காணப்படுகின்றது. இது தொடர்பில் பல தடவைகள் உரியவர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தும் யாரும் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

எனவே மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளைக் கருத்திற்கொண்டு உடனடியாக இப்பாலத்தை சீரமைத்துத் தரும்படி கோரிக்கை விடுத்தனர்.

முல்லை.மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன் இது தொடர்பில் கருத்துத் தெரவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மிக முக்கியமான மூன்று பாலங்களான வட்டுவாகல் பாலம், சங்கிலிப் பாலம், கொக்கிளாய் பாலம் என்பன சீரமைப்புச் செய்ய வேண்டியுள்ளது. மூன்று பாலங்களையும் மறு சீரமைப்புச் செய்வதற்கான கோரிக்கைகள் மற்றும் திட்டங்கள் எம்மால் உரிய அமைச்சுக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பெருந் தொகையான நிதி தேவை ப்படுவதன் காரணமாக இதுவரை அந்த நிதி கிடைக்கப்பெறவில்லை. அந்த நிதி கிடைக்கப்பெற்றதும் குறித்த பாலங்களை மறுசீரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (9)

# மனித உரிமைகளுக்கான சமாதான தூதுவர்கள் அமைப்பு மன்னாரில் அறிமுகம்



(மன்னார்)
மனித உரிமைகளுக்கான சமாதான தூதுவர்களின் மன்னார் மாவட்டத்துக்கான அமைப்பின் அறிமுகம் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மனித உரிமைகளுக்கான சமாதான தூதுவர்களின் அமைப்பின் இணைப்பாளர் சி.சிறிஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் விருந்தினர்களாக மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் எஸ்.கேதீஸ்வரன், மனித உரிமைகளுக்கான சமாதான தூதுவர்களின் அமைப்பின் பணிப்பாளர் எம்.எஸ்.சாதீக், தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலய அதிபர் எம்.கிறிஸ்ரியான், மன்னார் பிரதேச சபையின் செயலாள் என்.சிவயோகராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன் போது மனித உரிமைகளுக்கான சமாதான தூதுவர்களின் அமைப்பின் மன்னார் மாவட்டத்தின் அறிமுகம் இடம்பெற்றதோடு, அவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டு அங்கத்தவர்களுக்கு சான்றிதழ்களும்வழங்கப்பட்டன.(9)

# பயிர்ச் செய்கை நிலங்களை கையகப்படுத்திய வன இலாகா

## தொழில் வாய்ப்பின்றி அல்லலுறும் மருதமடு கிராம மக்கள்

(கண்டாவளை)

வாழ்வாதார மின்றியும் தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் பாதிக்கப்பட்ட தமக்கு உதவ அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் முன்வரவேண்டுமென முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மேற்கு மருதமடு கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள புதுக்குடியிருப்பு மேற்கு மருதமடுக் கிராமத்தில் தற்போது 680இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி வாழ்ந்து வருவதாகவும் இவ்வாறு வாழ்ந்து வருகின்ற குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டங்கள் கிடைத்திருக்கின்றபோதும், உட்கட்டுமான வசதிகளான வீதிகள் எதுவும் புனரமைக்கப்படவில்லை. இதனைவிட பல்வேறு தேவையுடைய மாற்றுத்திறனாளிகள் பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் எனப்பலதரப்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன.

பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் பிச்சையெடுத்து வாழ்கின்ற நிலைமைகூட இந்த கிராமத்தில் காணப்படுகின்றது எனக்குறிப்பிட்ட இக்கிராம மக்கள், மருதமடுக்குளத்தின் கீழ் மானாமோட்டை என்ற பகுதியில் 96 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களும், கள்ளவேட்டை என்ற பகுதியில் 125 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களும் பூர்வீகமாக இந்த மக்களாலேயே கடந்த 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் 30 வருடங்களாக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால், அவற்றுக்கான ஆவணங்கள் வழங்கப்படாது இருந்தன. இப்போது இந்தக் காணிகள் வன இலாகாவினால் மீள்வனமாக்கல் திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பயிர்ச் செய்கை நிலங்கள் கையகப்படுத்தப்பட்டமை, இப்பகுதியில் தொழில் வாய்ப்பின்மை என்பன இந்த மக்களின் வாழ்வை கேள்விக்குறியாக்கியுள்ளது.

எமது கோரிக்கைகளை எல்லோரிடமும் வைத்திருக்கின்றோம் ஆனால் எவரும் செவி சாய்ப்பதாக இல்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் மிக விரைவில் காணிகளை பெற்றுத்தர வேண்டுமென இப்பகுதி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

---

# சர்வமத நல்லிணக்க நிகழ்வு





(மன்னார்)

இலங்கையில் உள்ள அனைத்து மதங்களுக்கு இடையிலும் சகிப்புத்தன்மை மற்றும் சமூகங்களுக்கு இடையில் சமய நல்லிணக்கத்தை மிளிர வழி வகுத்தல் எனும் தொனிப்பொருளில் மன்னார் கரிற்றாஸ் வாழ்வுதயம் ஏற்பாடு செய்த உழவர் திருநாள் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் கரிற்றாஸ் வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சர்வமத தலைவர்கள் சமாதான புறாவை பறக்க விட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக சர்வமத தலைவர்கள், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் கலந்து கொண்டதுடன் கிராம மட்ட பிரதிநிதிகள்,சர்வமத ஒன்றியத்தின் பிரதி நிதிகள் உட்பட்ட பலர் கலந்து கொண்டனர். (9-285)




# உபகரணங்கள் வழங்கல்



(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களுக்கு மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தானால் நேற்று முன்தினம் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் கடந்த வருடம் பன்முகப்படுத்தப்பட்ட நிதித்திட்டத்தின் கீழ் சுமார் 2.59 மில்லியன் ரூபாய் நிதியிலிருந்து 7,40,000 ரூபா பெறுமதியான உபகரணங்கள் பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் தர்மபால, வவுனியா மாவட்ட மேலதிக செயலாளர் ரி.திரேஸ்குமார், வவுனியா பிரதேச செயலாளர் கமலதாசன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (9-299)

---

# விபத்துக்களைக் குறைக்க பொலிஸாருடன் ஒத்துழையுங்கள்

## பொறுப்பதிகாரி கோரிக்கை



(நெளுக்குளம்)

வவுனியாவில் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தவும், வீதி விபத்துக்களை குறைப்பதற்கும் சாரதிகள் போக்குவரத்து வழிமுறைகளை கடைப்பிடித்து பொலிஸாருக்கு ஒத்துழைப்புக்களை வழங்குமாறு போக்குவரத்துப்பிரிவின் பொறுப்பதிகாரியாக பதவி உயர் பெற்றுள்ள காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை பொலிஸ்மா அதிபரினால் நாடளாவிய ரீதியிலுள்ள போக்குவரத்துப் பொலிஸ் நிலையங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கையாக வவுனியா போக்குவரத்துப்பிரிவில் உப பொலிஸ் பரிசோதகராக கடமையாற்றிய காமினி திசாயாநக்கவிற்கு நேற்று முன் தினம் முதல் பொலிஸ் பரிசோதகராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு பொலிஸாருக்கு போதிய ஒத்துழைப்புக்களை வழங்குமாறும் போக்குவரத்து வழிமுறைகளைக் கடைப்பிடித்து நடக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-299)

# முல்லைத்தீவு முன்பள்ளி ஆசியர்கள் சம்பள உயர்வு கோரி மகஜர் கையளிப்பு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பொருளாதாரத்தில் வசதியற்ற முன்பள்ளி ஆசிரியர்கள் வன்னி மக்கள் காப்பகத்திடம் தமது கோரிக்கைகளை உள்ளடங்கிய மகஜர் ஒன்றினை நேற்று கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களாகிய தாம் மிகவும் பொருளாதாரத்தில் வசதியற்ற நிலையிலிருந்து வருவதுடன் தற்போது எமக்கு வழங்கப்பட்டு வரும் கொடுப்பனவுகள் எமது வாழ்வாதாரத்திற்கு போதுமானதாக இல்லை என்பதுடன் எமது சம்பள உயர்வு, வாழ்வாதாரத்திட்டம், மாணவர்களுக்கான உதவித் திட்டம் என்பவற்றை வழங்க உதவி செய்யுமாறு கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இதன்போது வன்னி மக்கள் காப்பகத்தின் தலைவர் நீல்சாந்த கருத்துத் தெரிவிக்கையில், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, கொக்குத்தொடுவாய் பகுதியைச் சேர்ந்த 132 முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் மாதாந்தம் நிபந்தனைகளுடன் எனது சொந்த நிதியிலிருந்து உதவிக் கொடுப்பனவு ஒன்றினை எதிர்வரும் வாரங்களில் வழங்குவதுடன் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி முன்பள்ளி ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, உடையார்கட்டு வேணாவில் புனித பீற்றர் ஆலயத்தில் போதகர் கெனடி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் 91 பேருக்கான கற்றல் உபகர ணங்கள் கையளிக்கப்பட்டதுடன், வவுனியா மயிலங்குளம் விளையாட்டுக்கழகத்திற்கு மின் விளக்குகள், விளையாட்டு உபகரணங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (9-299)

# ஒன்றுகூடல்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலக அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் கரைச்சி பிரதேச அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் சி.சந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (9-84)

# உழவியந்திரம் வழங்கி வைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வறுமை கோட்டின் கீழ் வாழும் போரால் பாதிக்கப்பட்ட இரு குடும்பஸ்தர்களின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு புலம் பெயர்ந்து வாழும் கொடையாளர்களால் உழவு இயந்திரம் ஒன்று கடந்த வருடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

பாலிநகர் பாண்டியன் உறவுகள் அமைப்பின் ஏற்பாட்டில் புலம்பெயர் உறவினர்களான இராசரத்தினம் நஞ்சன், தாமோதரம்பிள்ளை வரதன், குமாரசாமி மனோகரன் ஆகிய மூவரும் இணைந்து 23 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் செலவில் இந்த உழவு இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது. (9-281)

# பாரதம்

## ஈரானில் சிக்கித் தவிக்கும் மீனவர்களை மீட்க வேண்டும்

### வைகோ வலியுறுத்து



(சென்னை)

ஈரானில் சிக்கித் தவிக்கும் இந்திய மீனவர்களை மீட்டுவர தனி விமானம் அல்லது கப்பலை அனுப்ப வேண்டும்என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தினார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈரானில் 900 இந்திய மீனவர்கள் சிக்கியுள்ளனர் என்றும் அவர்களில் 700 பேர் குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருவதால், அங்கு உணவின்றி அச்சத்தில் தவிக்கும் மீனவர்களை மீட்க தனி விமானம் அல்லது கப்பலை அனுப்ப வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

சீனாவில் சிக்கியிருந்த இந்தியர்களை மீட்க மத்திய அரசு எடுத்த முயற்சிகள் பாராட்டுக்குரியவை என்று குறிப்பிட்டுள்ள வைகோ, அதேபோல் ஈரானில் தவிப்பவர்களையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார். (ஜ-2)

## டில்லி வன்முறை 903 பேர் கைது



(டில்லி)

வடகிழக்கு டில்லியில் நடந்த வன்முறை தொடர்பாக இதுவரை 167 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு இச்சம்பவம் தொடர்பாக 903 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என டில்லி பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக பொலிஸார் கூறுகையில், "டில்லி கலவரம் தொடர்பாக இதுவரை 167 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சுமார் 903 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தும்போது கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது" என பொலிஸார் தெரிவித்தனர்.

தலைநகர் டில்லியின் வடகிழக்குப் பகுதியில் குடியுரிமைத் திருத்தச் சட்ட எதிர்ப்பாளர்களுக்கும்ஆதரவாளர்களுக்கும்இடையே ஏற்பட்ட மோதல் பெரும் கலவரமாக வெடித்தது. இந்த வன்முறை சம்பவங்களில் 42 பேர் உயிரிழந்ததோடு, நூற்றுக்கணக்கானோர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பதற்றம் நிறைந்த பகுதிகளில் ஆயுதம் தாங்கிய பொலிஸ் மற்றும் துணை இராணுவம் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. வன்முறை தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (ஜ-2)

## ரஷ்யாவுடன் மோதும் எண்ணமில்லை பின்வாங்கியது துருக்கி



(டமாஸ்கஸ்)

சிரியாவில் நிலைகொண்டுள்ள ரஷ்யாவுடன் மோதும் எண்ணம் தங்களுக்கு இல்லை என துருக்கி தெரிவித்துள்ளது.

சிரிய இராணுவம் மீது தொடர்ச்சியாக தாக்குதலை தொடுத்து வரும் துருக்கி, இத்தாக்குதலை நிறுத்தப் போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து துருக்கி பாதுகாப்புத் துறை அமைச்சர் ஹூலுசி ஆகார் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இட்லிப் மாகாணத்தில், எங்களது படையினர் மீது சிரிய இராணுவம் கடந்த மாதம் 27 ஆம் திகதி நடத்திய விமானத் தாக்குதலில் 33 வீரர்கள் உயிரிழந்ததைத் தொடர்ந்து, அந்த நாட்டுப் படையினர் மீது தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம்.

சிரிய படையினருக்கு ஆதரவாகச் செயற்பட்டு வரும் ரஷ்யாவுடன் மோதும் எண்ணம் எங்களுக்கு இல்லை' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இறுதி இடமான இட்லிப் மாகாணத்தில், சிரியா மற்றும் ரஷ்யா கூட்டுப்படைகள் உக்கிர தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இந்நிலையில், தங்கள் நாட்டு படைவீரர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இட்லிப் மாகாணத்தில் உள்ள சிரிய படையினரின் நிலைகளை குறிவைத்து துருக்கி விமானத் தாக்குதல்கள் உள்ளிட்ட தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

சிரிய அரசு படையினருக்கு ரஷ்யா ஆதரவு அளித்து வருகிறது. ஆனால், போராளிகள் குழுக்களுக்கு துருக்கி ஆதரவு அளித்து வருகிறது. மேலும், சிரிய எல்லைக்குள் துருக்கி தனது படைகளை குவித்து வைத்துள்ளது.

இதனால் சிரியா - ரஷ்யா படையினருக்கும் துருக்கிக்கும் இடையில் மோதல் ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. (ஜ-2)

## உச்சக்கட்டப் போ

## சுட்டு வீழ்த்தப்பட்ட போ

### 100 டாங்கிகள்

(அங்காரா)

துருக்கிப் படைகளுக்கும் சிரியாவிற்கும் இடையில் மூண்டிருக்கும் போர்ப்பதற்றத்தின் நடுவே இரண்டு சிரிய போர் விமானங்களை சுட்டு வீழ்த்தியதுடன் 100 டாங்கிகள் அழிக்கப்பட்டதாக துருக்கிய பாதுகாப்பு அமைச்சர் ஹூலுசி அகர் தகவல் வெளியிட்டார்.

வடக்கு சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் ரஷ்ய கூட்டுப்படைகளுடன் சேர்ந்து சிரியா நடத்திய வான்வழித் தாக்குதலில் 34 துருக்கிய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், இருநாடுகளுக்கும் இடையே போர்ப்பதற்றம் அதிகரித்திருக்கும் நிலையில், துருக்கி நடத்திய தாக்குதலில் இரண்டு சிரிய

## உலகளவில் மூவாயிரத்து

## பலியெடுத்தது

(பீஜிங்)

உலகளாவிய ரீதியில் 3000 இற்கும்மேற்பட்டவர்கள்கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக சீன அதிகாரிகள் வெளியிட்டுள்ள அண்மைய புள்ளி விபரங்களில் சுட்டிக்காட்டினர்.

சீனாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி 42 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு தேசிய சுகாதார ஆணையகம் தெரிவித்துள்ளது. இந்த மரணங்கள் அனைத்தும் கொரோனாவின் மையமான ஹூபேயில் இடம்பெற்றுள்ளது.

சீனாவின் பிரதான நிலப்பரப்புகளில் மொத்தமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையானது 2,912 ஆக உயர்வடைந்துள்ளது.

இது தவிர சீனாவின் பிர



## இரண்டு மாதங்களில் 3 ஆ

## மெக்சிக்கோவில் எரிமலை



## கொரோனாவால் இறக்குமதி முடக்கம்; மாற்று வழியைத் தேடுகிறது இந்தியா

(சென்னை)

கொரோனா வைரஸ் பாதிப்பால் சீனாவிலிருந்து 1,050 வகைப் பொருட்களின் இறக்குமதி முடங்கியிருப்பதால், வேறு நாடுகளில் இருந்து அவற்றை இறக்குமதி செய்யும் உபாயத்தை கண்டறியும் பணியை இந்தியா தொடங்கியுள்ளது.

ஜவுளித் துணிகள், ஆன்டிபயோடிக் மருந்துகள், தொலைபேசிகள் உள்ளிட்ட 1,050 வகை பொருட்கள் சீனாவிலிருந்து இந்தியாவுக்கு அதிகம் இறக்குமதி செய்யப்படுகின்றன.

கொரோனா பாதிப்பால் இறக்குமதி முடங்கியிருப்பதால், ஆன்டிபயோடிக் மருந்து இறக்குமதி குறித்து இத்தாலி, சுவிட்சர்லாந்து நாடுகளுடனும் தொலைபேசி, மின் சாதனங்களின் இறக்குமதி குறித்து சில நாடு

# வெளிநாடு

## போர்ப்பதற்றம்

## _ போர் விமானங்கள்

### கிகள் அழிப்பு

நடன் தாக் ர்கள்

டையே மயில், சிரிய

போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டதோடு. 100 டாங்கிகள் அழிக்கப்பட் டுள்ளன.

ஆறு வான் பாதுகாப்பு அமைப்பு கள் அழிக்கப்பட்டிருப்பதாக துருக்கிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை "Spring Shield" என்கிற பெயரில் மேற்கொள்ளப் பட்டதாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளது.

இதற்கிடையே மூன்று ரஷ்ய ஊடகவியலாளர்கள் இஸ்தான் புல்லில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தால், ரஷ்யாவுடனான துருக்கி யின் உறவும் இன்று வலுவி ழந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டு ள்ளது. (ஜ-2)


# 5,000 கைதிகளை விடுவிக்க வேண்டும்; தலிபான்களின் கோரிக்கை நிராகரிப்பு

(காபூல்)

5,000 கைதிகளை விடுவி க்க வேண்டும் என்ற தலிபானின் கோரிக்கையை ஆப்கான் ஜனா திபதி அஷ்ரப் கானி நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நிராக ரித்தார்.

அமெரிக்காவிற்கும் இஸ்லா மிய போராளிகளுக்கும் இடையி லான ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஆப்கானிய அரசாங் கம் மற்றும் பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற் கான நிபந்தனையாக 5,000 கைதிகளை விடுவிக்க வேண் டும் என தலிபான் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில் நேற்று முன் தினம் காபூலில் இடம்பெற்ற



ஊடக சந்திப்பில் செய்தியாளர்க ளுக்கு கருத்து தெரிவித்த அவர், "ஆப்கானிஸ்தான் அரசாங்கம் 5,000 தலிபான் கைதிகளை விடுவிப்பதாக எந்த உறுதியும் வழங்கவில்லை" என அஷ்ரப் கானி தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் அமைதி நிலவ வேண்டி அமெரிக்காவுக் கும் தலிபான் தீவிரவாதிகளுக் கும் இடையே வரலாற்றுச் சிறப்பு மிக்க அமைதி ஒப்பந்தம் டோகா வில் கைச்சாத்திடப்பட்டது.

எதிர்வரும் 10 ஆம் திகதிக் குள் சிறையில் அடைக்கப்பட்ட 5,000 தலிபான்கள் 1,000 ஆப் கானிய அரசாங்க கைதிகளுக்கு ஈடாக விடுவிக்கப்படுவார்கள் என அந்த ஒப்பந்தத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், கைதி இடமா ற்று விவகாரத்தில் முடிவு செய் வது அமெரிக்காவின் அதிகாரத் தில் இல்லை என்றும் ஆப்கான் ஜனாதிபதி அஷ்ரப் கானி சுட்டிக் காட்டினார். (ஜ-2)

## ரத்துக்கு மேற்பட்டோரை

## து கொரோனா



தான நிலப்பரப்புகளுக்கு வெளியே 129 உயிரிழப்பு சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

ஈரான்- 54, இத்தாலி- 34, தென்கொரியா- 20, ஜப்பான்- 12, ஹொங்கொங்-02, பிரான்ஸ்- 02, பிலிப்பைன்ஸ்- 01, தாய் வான்- 01, அவுஸ்திரேலியா- 01, தாய்லாந்து- 01, அமெரிக்கா-01.

சீனாவின் பிரதான நிலப்பரப் பில் நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை முடிவில் 80,026 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகி யுள்ளதாக சீனாவின் தேசிய சுகா தார ஆணையகம் தெரிவித்தது. 44,462 நோயாளிகள் குணமடை ந்து வைத்திய சாலைகளிலிருந்து வெளியேற்றப் பட்டுள்ளதாகவும் சீன அதிகாரிகள் சுட்டிக்காட்டியு ள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# உடல் நலக்குறைவால் போப் பாதிப்பு; மக்கள் சந்திப்பு 3 ஆவது நாளாக ரத்து

(வாடிகன்)

போப் ஆண்டவர் பிரான்சிஸ் உடல்நலக்குறைவால் பாதிக்கப் பட்டுள்ளதாக வாடிகன் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

போப் ஆண்டவர் பிரான்சிஸ் (வயது-83), கடுமையான ஜல தோஷத்தால் அவதியுற்று வரு வதாக தகவல்கள் வெளியாகியுள் ளன. இதன் காரணமாக அவர்



நேற்று முன்தினம் தொடர்ந்து மூன்றாவது நாளாக மக்கள் சந்திப்பு மற்றும் அதிகாரபூர்வ நிகழ்ச்சிகளில் பங்கேற்கவில்லை. அவர் போப் ஆண்டவராகி 7 ஆண்டுகள் ஆன நிலையில் தொடர்ந்து 3 நாட்கள் நிகழ்ச் சிகளில் பங்கேற்காதது இதுவே முதல் முறை எனச் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. (ஜ-2)

## 3 ஆயிரம் நிலநடுக்கங்கள்

## மலை உருவாகும் அபாயம்



(மெக்சிக்கோசிட்டி)

மத்திய மெக்சிகோவின் மைக்கோ கன் (Michoacan) மாநிலம், கடந்த 2 மாதங்களில் 3 ஆயிரம் சிறிய நிலநடுக் கங்களைச் சந்தித்துள்ளது.

இதன் காரணமாக புதிய எரிமலை ஒன்று உருவாகி வருவதாக வல்லு நர்கள் தெரிவித்தனர். கடந்த 100 ஆண்டுகளாக புதிய எரிமலை எதுவும் உருவாகாத போதும் நாட்டில் செயற்பா ட்டில் உள்ள எரிமலைகளை அதிகம் கொண்ட இடமாக மைக் கோகன் காணப்படுகிறது.

இங்கு, அடிக்கடி ஏற்படும் நில அதிர்வால் குடியிருப்புகளுக்கு அருகே புதிய எரிமலை வளர்ந்து வருவதாக வல்லுநர்கள் தெரிவி த்தனர். இந்த புது அச்சுறுத்த லால் சுற்றுவட்டார மக்கள் பீதிய டைந்தனர். (ஜ-2)

# 400 ஆண்டுகள் பழைமையான வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பு

(டில்லி)

ஆந்திர மாநிலம் கடப்பா அருகே 400 ஆண்டுகள் பழைமை யான 8 பீரங்கிக் குண்டுகள் கண் டுபிடிக்கப்பட்டதாக இந்திய ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள் ளன. கண்டிகோட்டா என்ற இடத் தில் மசூதியின் பின்புறம் உள்ள சுற்றுலா மையத்தில் குறித்த பீரங்கிக் குண்டுகள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகி றது.

குறித்த பீரங்கி வெடிகுண்டு கள் ஒவ்வொன்றும் 15 முதல் 18 கிலோ எடை கொண்டதாக உள்ள தாகவும் சுமார் 400 ஆண்டுகள் வரையில் பழைமையானது என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இது குறித்து கருத்து தெரிவித் துள்ள அதிகாரிகள், மன்னர் காலத்தில் இங்கு ஆயுத தொழிற் சாலை செயற்பட்டு எதிரிகளை தாக்க குறித்த வெடிகுண்டுகள் தயாரிக்கப்பட்டு பின் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர். (ஜ-2)

## ம்;

## பா

மரு ,050 ந்தியா றன. முடங் ருந்து ளாந்து ாதன நாடு



களுடனும் இந்தியா கலந்துரையாடி வருகிறது. (ஜ-2)

# உ.பியில் பன்றிக்காய்ச்சல்; இதுவரை 12 பேர் உயிரிழப்பு

(டில்லி)

உத்தர பிரதேசத்தில் வேகமா கப் பரவி வரும் பன்றிக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்து ள்ளது.

இந்நிலையில் மீரட் நகரில் மாகாண ஆயுதப் படையினர் நூற்றுக்கணக்கானோர் ஒரே இடத்தில் முகாமிட்டுள்ளனர். அவர்களில் 17 பேருக்கு பன்றிக் காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டுள் ளதால் அவர்களைத் தனிமைப்ப டுத்தவும் உயர் அதிகாரிகள் உத் தரவு பிறப்பித்தனர்.

அத்துடன் மீரட் நகரில் மட்டும் இதுவரை 78 பேருக்கு பன்றிக் காய்ச்சல் பாதிப்புகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன.

இது குறித்து உன்னிப்பாக கவனித்து வருவதாக தெரிவித்து ள்ள சுகாதாரத்துறை அதிகாரிகள் வைத்தியசாலைக்கு போதுமான ளவு மருத்துவ மற்றும் பிற உப கரணங்கள் வழங்கப்பட்டுள்ளதா கவும் தெரிவித்துள்ளனர். (ஜ-2)

# பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் மைத்திரி பொய்ச் சாட்சியம்!

## “ குண்டுத் தாக்குதல் குறித்து முன்கூட்டியே அறிந்திருந்தாரா?”

### விசாரிக்கக் கோருகிறது ஐ.தே.க.





(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாக நாடு திரும்பச் சந்தர்ப்பம் இருந்தும் வராமல் இருந்த தன் மூலம் இதுதொடர்பாக அவர் முன்கூட்டியே அறிந்திருந்தாரா? என்ற சந்தேகம் எழுவதாக ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

குண்டுத் தாக்குதல் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு பிரசாரம் செய்தே கோட்டாபய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் அரசாங்கம் இது தொடர்பாக இதுவரை எந்த விசாரணையையும் மேற்கொள்ளவில்லை. குண்டுத் தாக்குதல் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணையின் போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடவும் வாக்குமூலம் பெற்றுக் கொண்டோம்.

அவரது வாசஸ்தலத்துக்குச் சென்று இது தொடர்பாக வாக்குமூலம் பெற்றுக் கொள்ளும் போது, குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற தினத்தில் சிங்கப்பூரில் இருந்த உங்களுக்கு உடனடியாக நாடு திரும்ப முடியாமல் போனதற்கு காரணம் என்ன? எனக் கேட்ட போது, ஸ்ரீலங்கன் எயார்லைன் விமானத்தில் அன்றையதினம் ஆசனம் இருக்கவில்லை. அதனால் தான் வரமுடியாமல்போனது என அவர் தெரிவித்தார்.

ஆனால் இது தொடர்பாக ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் அதிகாரிகள் சிலரை பாராளுமன்ற விசாரணைக் குழுவுக்கு அழைத்துக் கேட்ட போது, குறிப்பிட்ட தினத்தில் 20 இற்கும் அதிகமான ஆசனங்கள் மீதமிருந்ததாக சாட்சியமளித்திருந்தார்கள். இந்த விடயங்கள் அறிக்கையில் எழுதப்பட்டிருக்கின்றன. அப்படியாயின் முன்னாள் ஜனாதிபதி ம்மைத்திரி பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு பொயச் சாட்சியம் வழங்கியுள்ளார்.

அத்துடன் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அறிந்து கொண்டுதான் அவர் இவ்வாறு செயற்பட்டாரா? என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது. அதனால் அரசாங்கம் இது தொடர்பாக மைத்திரிபால சிறிசேனவை விசாரிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நாடாளுமன்றத் தேர்தலுக்கு 5.5-7.5 பில்லியன் செலவு

(கொழும்பு)

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு சுமார் 5.5 பில்லியன் ரூபாய் செலவுகள் ஏற்படும் என்றும் ஆனால் தேர்தலில் பல அரசியல் கட்சிகள் போட்டியிட்டால் 7.5 பில்லியன் ரூபாய் வரை செலவு ஏற்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.**



இது குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, தற்போது தேர்தல்களை நடத்துவதற்கான எந்தவிதமான நிதி ஒதுக்கீடுகளும் இல்லை என்றும், இதன் காரணமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் நிதி ஒதுக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது என்றும் கூறினார்.

2019 நவம்பரில் நாடாளுமன்றத்தில் கணக்குச் சமர்ப்பிக்கப் பட்டபோது, 2020 முதல் காலாண்டில் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்த வேண்டிய அவசியத்ந்த அரசாங்கம் முன்கூட்டியே எதிர்பார்க்கவில்லை.

அத்தோடு அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை என்பதனால் எதிர்வரும் தேர்தல்களுக்காக நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என மகிந்த தேசப்பிரிய கூறினார்.

எனவே இந்த விடயம் குறித்து இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் வினவியபோது, "நாடாளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிதி தொடர்பான அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்படும்.

நாடாளுமன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்படும்போது, அதற்கான நிதி ஜனாதிபதியால் கையாளப்படும், மேலும் தேவையின் அடிப்படையில் நிதியைத் தேர்தல்கள் ஆணையத்திற்கு வழங்க தேவையான ஏற்பாடுகளை ஜனாதிபதி மேற்கொள்வார்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உலமா சபையினர் பேராயருடன் சந்திப்பு



(பொறளை)

உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று ஒருவருடம் பூர்த்தியாகவுள்ள நிலையில் நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்துவது தொடர்பில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையினர் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்து கலந்தாலோசித்தனர். கொழும்பு-பொறளையிலுள்ள பேராயர் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றதாக பேராயரின் பிரத்தியேகச் செயலாளர் அருட்தந்தை டெனின்டன் தெரிவித்தார். அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது நல்லிணக்கம் மற்றும் நாட்டின் அபிவிருத்தி எனப் பல விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டதாக அருட்தந்தை டெனின்டன் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இலஞ்சம்

ஒரு காலத்திலே பிரஷ்யா என்றொரு தேசம் இருந்தது. இப்போது ஜேர்மனி இருக்கல்லவா இதோட பெரும்பகுதி ஒரு காலத்திலே "பிரஷ்யாங்" என்கிற பேரோட இருந்தது. அப்போ அதுக்கு அரசராக இருந்தவர் மகாபிரடரிக் (ஃபிரெடரிக் தி கிரேட்)

அந்த ராஜாவுக்கு ஒரு சந்தேகம்.

"நாம் பலவகையான வரிகளை விதித்து வசூல் செய்யுறோம். அப்படிச் செய்தும் வருமானம் குறைந்து கொண்டே போகுதே. இதுக்கு என்ன காரணமாக இருக்கும்?" இதுதான் அவருக்கு ஏற்பட்ட சந்தேகம்.

ஒரு சமயம் அந்த அரசர் தம்முடைய அமைச்சர்களையும் பிரபுக்களையும் தளபதிகளையும் கூப்பிட்டு ஒரு விருந்து வைத்தார்.

விருந்து முடிந்ததும் அவர்களைப் பார்த்து இந்த சந்தேகத்தைக் கேட்டார். வரிகள் அதிகமாக விதித்து வருமானம் குறைவதற்கு என்ன காரணம் என்று கேட்டார்.

பலபேருக்கு இதுக்குச் சரியான பதில் சொல்லத் தெரியவில்லை. அனுபவசாலியான ஒரு தளபதி எழுந்தார்.

அரசே! அது எப்படி என்பதை இப்ப உங்களுக்கு காட்டுறேன் என்றார். உடனே ஒரு பெரிய பனிக்கட்டி ஒன்றை தன்னுடைய கையிலே எடுத்தார். அதை அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்தார். பின்பு அதை அடுத்தவரிடம் கொடுத்தார். அவரும் அதைப் பார்த்து விட்டு அடுத்தபடியாக இருந்தவரிடம் கொடுத்தார். இப்படியே இது ஒவ்வொருத்தர் கைமாறி கடைசியிலே மன்னர் கைக்குப் போய்ச் சேர்ந்தது.

மன்னர் கைக்கு அந்தப் பனிக்கட்டி போய்ச்சேர்ந்தபோது அது கொஞ்சமாக உருகி ஒரு பட்டாணிக் கடலை அளவுக்கு ஆகிவிட்டது. மன்னர் யோசித்தார்.

வரி அதிகமாகப் போட்டாலும் வந்து சேர்வது குறைவாக இருக்கிறதுக்கு என்ன காரணம் என்பது அவருக்குப் புரிந்து போய்விட்டது. காலம் தான் மாறிக்கொண்டிருக்கே தவிர இந்த இலஞ்சம் வாங்கிற பழக்கம் மாறினதாக இல்லை.

இன்னொரு ராஜா இருந்தார். அவர் தன்னுடைய இராஜாங்கத்திலே இலஞ்ச ஊழலே இருக்கக் கூடாது என்று நினைத்தார். அவரிடம் பல்வேறு துறைகளுக்கும் பொறுப்பாக இருந்த பலபேரும் ரொம்ப சுத்தமாகவும் நேர்மையாகவும் இருந்தார்கள். ஒரே ஒருத்தர் மட்டும் எல்லாரிடமும் இலஞ்சம் வாங்கிக் கொண்டே இருந்தார். அவரை வேறு துறைகளுக்கு மாற்றிப் பார்த்தார் அந்த ராஜா. எந்த வேலையைக் கொடுத்தாலும் அதிலேயும் இலஞ்சம் வாங்குவதற்கு ஒரு வழியைக் கண்டு பிடிப்பார் அந்த ஆள்.

ராஜாவுக்கு இது ஒரு பெரிய தலைவலியாப் போச்சுது. இவரை என்ன செய்கிறது? இவருக்கு என்ன வேலையைக் கொடுக்கிறது? கொஞ்சம் கூட இலஞ்சம் வாங்கிறதுக்கு சந்தர்ப்பம் இல்லாத ஒரு வேலையைக் கொடுக்க வேண்டும் என்று திட்டம் போட்டார். ஒரு நாள் அவருக்கு அந்த உத்தரவும் போட்டார்.

அதாவது அவருக்கு என்ன வேலையென்றால் கடற்கரையிலே தான் அவருக்கு அலுவலகம். அங்கேயே இருந்துகொள்ள வேண்டியது. தினமும் எத்தனை கடல் அலை கரையிலே வந்து மோதுகிறது என்பதை கணக்கெடுத்து ராஜாவுக்கு தெரிவிக்க வேண்டியது. இதுதான் அவருக்கு வேலை.

பேசாமல் அலையை எண்ணிக்கொண்டு உட்கார்ந்திருக்கட்டும். அப்போதாவது அவர் இலஞ்சம் வாங்கிற சந்தர்ப்பம் இல்லாமலே போய்விடும் என்று நினைத்தார் ராஜா.

இந்த ஆள் கடற்கரைக்குப் போய் வேலையிலே இணைந்து கொண்டார். ஒரு மாதத்திலே அங்கே சொந்தமாக ஒரு பிரமாண்டமான மாளிகை கட்டினார். ராஜாவுக்கு இது பெரிய ஆச்சரியமாகப் போச்சுது. அலையை எண்ணுகிற வேலையிலே அந்த ஆள் எப்படி பணம் சம்பாதித்தார் என்று அக்கம் பக்கத்திலே விசாரித்துப் பார்த்தார்.

அந்த ஆள் என்ன செய்திருக்கிறார் என்றால் கடற்கரையிலே போய் பொறுப்பு ஏற்றுக்கொண்டவுடனே அங்கே இருந்த மீனவர்களிடம் "இந்த கரையிலே ஒரு நாளிலே வந்து மோதுகிற அலைகள் எத்தனை?" என்று கேட்டிருந்தார்.

"அது எப்படித் தெரியும்?" என்றார்கள் அவர்கள்.

தினமும் அந்த எண்ணிக்கை தெரிய வேண்டும். நம் ராஜாவுக்கு "தினமும் அறிக்கை அனுப்ப வேண்டும். தவறினால் நீங்கள் இந்தக் கடலிலே போய் மீன்பிடிக்கிறதுக்கு ராஜாவோட அனுமதி கிடைக்காது" என்று சொல்லியிருக்கிறார். மீனவர்கள் பயந்து போய்விட்டார்கள். கடலுக்குப் போக அனுமதி இல்லையென்றால் பட்டினி கிடக்க வேண்டிய நிலை ஏற்படுமே. மெதுவாக அந்த ஆளிடம் போனார்கள். காதோட காதா சொன்னார்கள்...

ஐயா எங்களாலே கடல் அலையை எண்ண முடியாது. தினமும் எங்களாலே முடிந்ததை உங்களுக்கு பணமாக கொடுத்திடுறோம். நீங்கதான் ராஜாவிடம் சிபாரிசு செய்து நாங்கள் தொடர்ந்து மீன் பிடிக்கிறதுக்கு அனுமதி வாங்கித் தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

பணம் தினமும் வந்து சேர ஆரம்பித்து விட்டது.

"பதவியிலே மற்ற பதவியைவிட இந்தப் பதவி எவ்வளவோ மேல்" என்று நினைத்து விட்டான் அந்த ஆள்.

அதுமட்டுமல்ல "தயவு செய்து என்னை இந்த இடத்தைவிட்டு மாற்றிவிடாதீர்கள்" என்று வேறு கேட்க ஆரம்பித்து விட்டான்.

## "அதிகாரத்தில் இருக்கையில் அடையாளப்படுத்த முடியாது"

# தோல்வியடைந்து நெருக்கடியில் இருக்கும் போது அரசியல்வாதிகளின் உண்மைத்தன்மையை அறியலாம்

## மகிந்தானந்த நேர்மையானவர்-மகிந்த புகழாரம்





(கண்டி)

அரசியல்வாதிகளை அதிகாரத்தில் இருக்கும் போது அடையாளப்படுத்த முடியாது. தோல்வியடைந்து நெருக்கடியில் இருக்கும் நிலையிலேயே அரசியல்வாதிகளின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள முடியும்.

இதற்கு இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே சிறந்த எடுத்துக்காட்டு.

அதிகாரம் இல்லாத வேளையிலும் உண்மையாகவும், நேர்மையாகவும் செயற்பட்டார். தனது பிரதேசத்தின் அபிவிருத்திக்காகத் தொடர்ந்து நெருக்கடிகளையும், கோரிக்கையையும் விடுத்தவர் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மின்வலுத்துறை இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவின் அரசியல் பயணத்தின் 30 ஆவது வருட பூர்த்தி நிறைவைக் கொண்டாடும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் நேற்று முன்தினம் கண்டி நகரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

---

## "ஆயிரம் ரூபாய் தொடர்பில் நான் மௌனம் காத்தேன்"

### இனி என்னால் முடியாது-திகா




(ஹற்றன்)

பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் வே.இராதாகிருஷ்ணன் உட்பட மூவர் போட்டியிடுவோம்.

தேசியப் பட்டியல் ஊடாகவும் ஒருவரை பாராளுமன்றம் அழைத்துச் செல்வோம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய முன்னணியின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஹற்றன் டீ.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் தலைமையேற்று உரையாற்றிய திகாம்பரம் மேலும் தெரிவிக்கையில்,

அன்று தை பிறந்தால் வழி பிறக்கும் எனச் சொன்னார்கள். அதன் பின்னர் மார்ச் முதலாம் திகதி முதல் ஆயிரம் ரூபாய் கிடைப்பது உறுதி என்றார்கள். ஆனால் இன்று ஏப்ரல் 10 ஆம் திகதியே அது கிடைக்கும் என அறிவிக்கின்றார்கள்.

ஆயிரம் ரூபாய் தொடர்பில் கடந்த காலங்களில் எவ்வித கருத்தையும் முன்வைக்காமல் நான் மௌனம் காத்தேன். ஏதாவது கதைத்திருந்தால் திகாம்பரம்தான் அதைத் தடுத்துவிட்டார் எனத் துள்ளி குதித்திருப்பார்கள். எனினும், தற்போது அது பற்றிக் கதைக்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது 750 ரூபாய் வழங்கப்பட்டுவரும் நிலையில் அதனுடன் மேலும் 250 ரூபாயை சேர்த்து நாட்சம்பளமாக ஆயிரம் ரூபாயை பெற்றுக் கொடுத்தால், நாம் மாலை அணிவித்து வரவேற்போம்.

எனினும், கொழுந்து அதிகமாக எடுக்க வேண்டும்.75 வீத கட்டாய வரவு இருக்க வேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகளை விதித்தும், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றையும் சம்பளத்துடன் சேர்த்துக்காட்டி எப்படியும் ஆயிரம் என்ற முடிவு எடுக்கப்படுமானால் அதனை ஏற்கமுடியாது. தொழிலாளர்களும் ஏற்கமாட்டார்கள்.

அதேவேளை, 50 ரூபாவை வாங்கிக்கொடுக்க முடியாத திகாம்பரத்துக்கு ஆயிரம் ரூபாய் பற்றிக் கதைப்பதற்கு எவ்வித அருகதையும் இல்லை என சிலர் விமர்சிக்கின்றனர்.

50 ரூபாவை பெற்றுக்கொடுப்பதற்கு முழு வீச்சுடன் செயற்பட்டேன். நிதி அமைச்சிலிருந்து அதற்கான நிதி பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சுக்கு வழங்கப்பட்டது.

எனினும், அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானும் முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவும் இணைந்து நாடகமாடியே 50 ரூபாவை இல்லாமல் செய்தனர்.

50 ரூபாய் தொழிலாளர்களுக்கு கிடைத்துவிட்டால் திகாம்பரத்துக்கு மக்கள் ஆதரவு பெருகிவிடும் என்ற அச்சத்தாலேயே நுவரெலியா மாவட்டத்திலுள்ள இவர்கள் இருவரும் அவ்வாறு செய்தனர்.

கடந்த நான்கரை வருடங்களில் நாம் எமது மக்களுக்கு பல சேவைகளை வழங்கினோம். துரோகம் இழைக்கவில்லை. வேலைகளை செய்துகாட்டி விட்டுத்தான் வாக்கு கேட்டு வருகின்றோம். ஆனால், 80 ஆண்டு கால அரசியல்வாதிகள், இனித்தான் செய்யப் போகின்றோம் எனக் கூறுகின்றனர்.

ஆகவே, வேலை செய்தவர்களுக்கு வாக்களிப்பதா? அல்லது ஏமாற்றுபவர்களுக்கு வாக்களிப்பதா? என மக்கள் முடிவெடுக்க வேண்டும்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரே நாம் முடிவுகளை எடுப்போம். ஆனால், அதற்கு முன்னரே எனக்கும் திகாவுக்கும் பிரச்சினை. உதயாவுக்கும், இராதாகிருஷ்ணனுக்கும் பிரச்சினை என்றெல்லாம் கதைகள் பரப்பட்டு வருகின்றன. தொழிலாளர் தேசிய சங்கம், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியன மலையக மக்களின் மனங்களை வென்ற பாரிய கட்சிகளாகும். எனவே உரிய நேரத்தில் உரிய வகையில் முடிவுகள் எடுக்கப்படும்.

இராதாகிருஷ்ணன் உட்பட தமிழ் முற்போக்கு கூட்டணியில் நுவரெலியா மாவட்டத்தில் மூவர் போட்டியிடுவோம். மூவரும் வெற்றி பெறுவோம். தேசியப் பட்டியல் ஊடாகவும் ஒருவரைப் பாராளுமன்றம் அழைத்துச் செல்வோம்.

மலையகத்தில் உடைக்கவே முடியாத கூட்டணி என்ற பெருமையும் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு இருக்கின்றது.

பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று நாம் ஆட்சியைப் பிடிப்போம். நான் மீண்டும் அமைச்சராவேன். அவர்கள் அடிக்கல் நட்டாலும் திட்டங்களை நாமே திறந்து வைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## அதிவேக நெடுஞ்சாலையில் திடீரென தீப்பற்றிய பேருந்து



(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் 110 ஆவது மைல் கல் பகுதிக்கு அருகில் இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்து ஒன்றில் திடீரென தீப்பரவல் ஏற்பட்டது.

கொட்டாவை - மாக்கம்புற பகுதியிலிருந்து அம்பாந்தோட்டை நோக்கிப் பயணித்த அம்பாந்தோட்டை சாலைக்குச் சொந்தமான பேருந்தில் இந்தத் தீப்பரவல் ஏற்பட்டது.

இந்நிலையில், பேருந்தில் பயணித்தவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

பேருந்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்தத் தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (இ-7)

---

## கொரோனா வைரஸ்

# இலங்கையில் 16 பேர் தொடர்ந்து கண்காணிப்பில்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் 16 பேர் தொடர்ந்தும் கண்காணிப்பில் உள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்தது.

தொற்று நோயியல் பிரிவு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட புள்ளி விபர அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

அதாவது ஐந்து பேர் என்.ஐ.ஐ.டியிலும் நான்கு பேர் நீர்கொழும்பு டி.ஜி.ஹெச்.சிலும் மூன்று பேர் குருநாகல் போதனா வைத்தியசாலையிலும் இரண்டு பேர் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையிலும் ஒருவர் கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் மேலும் ஒருவர் கொழும்பில் உள்ள ரிட்ஜ்வே வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டதாக தொற்றுநோயியல் பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பொதுமக்கள் முகமூடி அணிய வேண்டிய அவசியமில்லை என்று சுகாதார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் காய்ச்சல், தடிமல் போன்ற நோய் இருப்பவர்களும் குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி உள்ளவர்களுக்கும் பொது இடங்களுக்குச் செல்லும்போது முகமூடி அணிவது நல்லது என்று அந்த அமைச்சு சுட்டிக் காட்டியது.

இதேவேளை உலக சுகாதார நிறுவனம் கடந்த சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் உலகளவில் 60 நாடுகளில் பரவியுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தால் 85ஆயிரத்து403 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அதில் தற்போது 2,924 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (இ-7)

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

## 10

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு, ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**குறிப்பு-** 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டமூலத்தின் 20 (1) ஆம் பிரிவின் கீழ் திடீர் சந்தர்ப்ப நிதியமொன்றை ஸ்தாபிப்பதற்காகவும், அத்துடன் தொடர்புடைய இடைநேர் விளையக்கூடிய விடயங்களை ஏற்பாடு செயவதற்காகவும் மாகாண சபைகள் மாகாணத்தின் அவசரகால நிதியம் சம்பந்தமாக மாகாண அவசரகால நிதிய நியதிச் சட்டத்தை உருவாக்கிக் கொள்கின்றன. ஊவா மாகாண சபையின் ஊவா மாகாணத்தின் 1989 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால நிதியம் நியதிச் சட்டம் 1989.07.11 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டது. வடமாகாண சபையைப் பொறுத்த மட்டில் அவ்வாறானதொரு மாகாணத்தின் அவசரகால நிதியம் நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

### மாகாண சபைகளால் உருவாக்கப்பட்ட வேறு நிதியங்கள்

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டத்தில் மாகாண நிதியம் (பிரிவு 19) சம்பந்தமாகவும் மற்றும் மாகாணத்தின் அவசரகால நிதியம் (பிரிவு 20) சம்பந்தமாகவும் மட்டுமே கூறப்பட்டுள்ளது. இந் நிதியங்கள் உருவாக்கப்பட்டு அவை மாகாண சபை நியதிச் சட்டங்களாக மாகாண சபையில் நிறைவேற்றப்படல் வேண்டும். ஆனால் எல்லா மாகாண சபைகளிலும் இந் நிதியங்களுக்கு நியதிச்சட்டங்கள் உருவாக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சில மாகாண சபைகளில் இவை ஆளுநரின் குறிப்பாணை (memo) மூலம் உருவாக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இவை நிதிப்பிரமாணங்களுக்கு ஒத்திசைவானதா? என்பது தெரியவில்லை. மாகாணசபைகள் சட்டத்தில் சொல்லப்பட்ட இவ்விரு நிதியங்களைவிட மாகாண சபைகள் "முதல் அமைச்சர் (நம்பிக்கை) நிதியம்" அல்லது "ஆளுநர் (நம்பிக்கை) நிதியம்" அல்லது "முதல் அமைச்சர் (நம்பிக்கை) நிதியம்" மற்றும் "ஆளுநர் (நம்பிக்கை) நிதியம்" இரண்டையும் உருவாக்கி அவற்றை மாகாண சபையில் நியதிச் சட்டங்களாக நிறைவேற்றி நடைமுறைப்படுத்தி வருவதைக் காணலாம். உதாரணமாக ஊவா மாகாண சபையை எடுப்போமானால் "முதல் அமைச்சர் (நம்பிக்கை) நிதியம்" மற்றும் "ஆளுநர் (நம்பிக்கை) நிதியம்" இரண்டையும் உருவாக்கி அவற்றை மாகாண சபையில் நியதிச் சட்டங்களாக நிறைவேற்றி நடைமுறைப்படுத்தி வருவதைக் காணலாம். அந் நிதியங்களின் தேவைகள் பற்றி அந் நியதிச் சட்டங்களில் கூறப்பட்டுள்ளவை கீழே தரப்படுகின்றன.

> **மாகாண சபைகள் "முதல் அமைச்சர் (நம்பிக்கை) நிதியம்" அல்லது "ஆளுநர் (நம்பிக்கை) நிதியம்" அல்லது "முதல் அமைச்சர் (நம்பிக்கை) நிதியம்" மற்றும் "ஆளுநர் (நம்பிக்கை) நிதியம்" இரண்டையும் உருவாக்கி அவற்றை மாகாண சபையில் நியதிச் சட்டங்களாக நிறைவேற்றி நடைமுறைப்படுத்தி வருவதைக் காணலாம்.**
>
> **ஊவா மாகாண சபையை எடுப்போமானால் "முதல் அமைச்சர் (நம்பிக்கை) நிதியம்" மற்றும் "ஆளுநர் (நம்பிக்கை) நிதியம்" இரண்டையும் உருவாக்கி அவற்றை மாகாண சபையில் நியதிச் சட்டங்களாக நிறைவேற்றி நடைமுறைப்படுத்தி வருவதைக் காணலாம்.**

### ஊவா மாகாணத்தின் ஆளுநரின் நிதியம் பற்றிய நியதிச்சட்டம்.

இந் நிதியத்தின் நோக்கமாகக் கூறப்பட்டுள்ளதாவது. ஊவா மாகாணத்தின் வறுமை நிலைக்கு நிவாரணமளிப்பதற்காகவும் கல்வி அல்லது அறிவாற்றலை மேன்மைப்படுத்துவதற்காகவும் சமய நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்காகவும் மாகாணத்தில் சேவைகளை ஆற்றியுள்ளவர்களைப் பாராட்டுவதற்காகவும் ஊவா மாகாணத்தில் விளையாட்டுத் துறையினை முன்னேற்றவும் ஊவா மாகாணத்தின் பொது மக்களின் நலன்களுக்கும் வேறு நடவடிக்கைகளுக்கும் என நிதியை வழங்குவதற்காகவுமென ஊவா மாகாண ஆளுநரின் நிதியம் எனப்படும் நிதியம் ஒன்றினை ஏற்படுத்தவும் அத்தோடு சம்பந்தப்பட்ட அல்லது இயைபான நடவடிக்கைகளையும் ஏற்பாடு செய்வதற்கான ஒரு நியதிச் சட்டமாகும்.

இந் நிதியத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் கட்டுப்பாடு என்பன இந் நியதிச் சட்டத்தில் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு உட்பட்டதாக அமைக்கப்படுகின்ற கட்டுப்பாட்டுச் சபைக்குரியதாகும். இக் கட்டுப்பாட்டுச் சபையில் ஊவா மாகாணத்தின் ஆளுநர், ஊவா மாகாணத்தின் முதல் அமைச்சர், ஊவா மாகாண சபையின் தவிசாளர், ஊவா மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அல்லது அவரால்பெயர்குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர், ஊவா மாகாணத்தின் தலைமைச் செயலாளர், ஊவா மாகாணத்தின் ஆளுநரின் செயலாளர், ஊவா மாகாணத்தின் ஆளுநரினால் நியமிக்கப்படும் ஒருவர் மற்றும் கணக்காளர், சட்டத்தரணி உட்பட வேறு மூன்று பேர் இருத்தல் வேண்டும்.

இந் நிதியத்திற்கு (அ) கொடுப்பனவுகள், நன்கொடைகள் மூலம் கிடைக்கப்பெறும் நிதி, (ஆ) மாகாண சபையின் நிதியத்திலிருந்து வழங்கப்படுகின்ற நிதி, (இ) வேறு வழிகளில் இருந்து கிடைக்கப் பெறத்தக்கதான நிதி போன்ற வருமானங்கள் உள்வாங்கப்படும். கணக்காளர் நாயகத்தினால் வருடந்தோறும் இந் நிதியத்தின் கணக்குகள் பரிசோதனை செய்யப்படுதல் வேண்டும். அக்கணக்காய்வின் முடிவுகள் பற்றிய அறிக்கையினை மாகாண ஆளுநர், மாகாண சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

### ஊவா மாகாண சபையின் முதல் அமைச்சரின் நிதியம் பற்றிய நியதிச்சட்டம்.

இந் நிதியத்தின் நோக்கமாகக் கூறப்பட்டுள்ளதாவது. ஊவா மாகாணத்தின் வறுமை நிவாரணத்துக்கு ஏற்பாடு செய்வதற்காகவும் கல்வியை அல்லது அறிவை முன்னேற்றுவதற்காகவும் சமயத்தை முன்னேற்றுவதற்காகவும் மாகாணத்துக்குச் சேவையாற்றியுள்ள ஆட்களுக்குப் பரிசில்களை வழங்குவதற்காகவும் மாகாணத்தில் உள்ள பொது மக்களுக்கு நன்மை பயக்கும் அல்லது அக்கறையுள்ள வேறு நோக்கங்களுக்காகவும் "முதல் அமைச்சரின் நிதியம்" என அழைக்கப்பட வேண்டிய நிதியமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கான ஒரு நியதிச் சட்டமாகும்.

இந் நிதியத்தின் நிர்வாகம், முகாமை மற்றும் மூலதனம் என்பன இந்நியதிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அமைக்கப்பட்ட ஆளுநர் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

இவ் ஆளுநர் சபையில் மாகாணத்தின் முதல் அமைச்சர், ஊவா மாகாணத்தின் ஆளுநர் நியமித்த ஒருவர், ஊவா மாகாண சபையின் எதிர்த்தரப்பினரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது எதிர்த்தரப்பினை பிரதிநிதித்துவம் செய்யும், முதல் அமைச்சரால் நியமிக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர் ஒருவர், மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு மாகாணத்தின் முதல் அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஏனைய இருவர் இருத்தல் வேண்டும். முதல் அமைச்சர் சபையின் தலைவராதல் வேண்டும்.

இந் நிதியத்திற்கு மானியங்கள், நன்கொடைகள் அல்லது கொடைகள் என்ற வகையில் நிதியம் பெறக்கூடிய எல்லாப் பயன்களும் நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

கணக்காளர் நாயகத்தினால் வருடந்தோறும் நிதியத்தின் கணக்குகள் பரிசோதனை செய்யப்படுதல் வேண்டும். அக் கணக்காய்வின் முடிவுகள் பற்றிய அறிக்கையினை கணக்காளர் நாயகம் மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். ஆளுநர் அதனை மாகாண சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஊவா மாகாண சபையின் முதல் அமைச்சரின் நிதியம் மற்றும் ஆளுநரின் நிதியம் ஆகியவற்றின் நோக்கம், நிர்வாகம், நிதி வருமானம் மற்றும் நிதி செலவிடும் முறைகளைப் பார்க்கும் போது பெரிய வேறுபாடுகளைக் காண முடியவில்லை. எனவே ஒரு மாகாணத்திற்கு முதல் அமைச்சரின் நிதியம் மற்றும் ஆளுநரின் நிதியம் என இரு வேறுபட்ட நிதியங்கள் தேவைதானா? என எண்ணத் தோன்றுகின்றது. ஆனால் முதல் அமைச்சரும் ஆளுநரும் நிதியத்தினை தத்தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக இரு வேறுபட்ட நிதியங்களை உருவாக்கியுள்ளார்களோ தெரியவில்லை.

> **ஊவா மாகாண சபையின் முதல் அமைச்சரின் நிதியம் மற்றும் ஆளுநரின் நிதியம் ஆகியவற்றின் நோக்கம், நிர்வாகம், நிதி வருமானம் மற்றும் நிதி செலவிடும் முறைகளைப் பார்க்கும் போது பெரிய வேறுபாடுகளைக் காண முடியவில்லை. எனவே ஒரு மாகாணத்திற்கு முதல் அமைச்சரின் நிதியம் மற்றும் ஆளுநரின் நிதியம் என இரு வேறுபட்ட நிதியங்கள் தேவைதானா? என எண்ணத் தோன்றுகின்றது. ஆனால் முதல் அமைச்சரும் ஆளுநரும் நிதியத்தினை தத்தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக இரு வேறுபட்ட நிதியங்களை உருவாக்கியுள்ளார்களோ தெரியவில்லை.**

### வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைகளில் முதல் அமைச்சரின் நிதியம் பற்றிய சர்ச்சை

வடக்கு மாகாணசபையிலும் கிழக்கு மாகாண சபையிலும் முதல் அமைச்சரின் நிதியத்தினை தாபிப்பதற்கு அவ்அவ் மாகாண ஆளுநர்கள் அனுமதி வழங்குகிறார்களில்லை. வடமாகாண சபை பலமுறை முதல் அமைச்சரின் நிதியத்தினை தாபிப்பதற்கு முயற்சித்த போதும் பலன் கிடைக்கவில்லை. வடமாகாண சபையின் "முதலமைச்சர் நிதியம்" சம்பந்தமாக மாகாண சபையிலும் வெளியிலும் பல வாத விவாதங்கள் நடைபெற்றன, நடைபெறுகின்றன. அவற்றுள் சில கீழே தரப்படுகின்றன.

"முதலமைச்சர் நிதி நியதிச்சட்டத்திற்கு ஆளுநரின் அங்கீகாரம் பெறப்படத் தேவையில்லை. வடக்கு மாகாண ஆளுநர் குழப்பம் ஏற்படுத்தி விடக்கூடாதென்ற நோக்கிலேயே முதல் அமைச்சர் நிதி நியதிச் சட்டத்தினை ஆளுநர் பார்வைக்கு நல்லெண்ண அடிப்படையில் அனுப்பி வைத்தோம் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

> **வடக்கு மாகாண சபையிலும் கிழக்கு மாகாண சபையிலும் முதல் அமைச்சரின் நிதியத்தினை தாபிப்பதற்கு அவ்அவ் மாகாண ஆளுநர்கள் அனுமதி வழங்குகிறார்களில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு.**

வடக்கு மாகாண சபையின் அமர்வில் அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்குக் கிழக்கில் மாகாண சபை உறுப்பினர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆளுநர்கள் மறுப்புத் தெரிவித்து வருகின்றார். கிழக்கு மாகாணத்தில் முதல் அமைச்சர் நிதியம் தொடர்பில் அறிவிக்காது கொண்டு வந்ததற்கு ஆளுநர் தடை விதித்தார். அதற்கமைய முரண்பாடுகளை ஏற்படுத்தாது செயற்படவே தான் வடக்கு மாகாண ஆளுநருக்கு அறிவித்திருந்தோம் என முதல் அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதல் அமைச்சர் நிதியம் தொடர்பிலான விவாதம் சபையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. எனினும் முதல் அமைச்சர் நிதியத்திற்கு ஆளுநர் தடை விதித்திருந்தார். எனினும் அவரது அங்கீகாரம் இன்றி சபையில் எடுத்துக் கொள்ளலாம் என முதல் அமைச்சரால் கூறப்பட்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் குறித்த சட்டத்தினை முன்னாள் உறுப்பினர் சயந்தன் முன்மொழிய முன்னாள் உறுப்பினர் அஸ்வின் வழிமொழிந்தார். எனினும் சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, முதலமைச்சர் நிதியம் தொடர்பில் அனுமதிக்காக ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது தவறு என்றும் அரசியல் சட்டத்தில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமில்லை. எனவே எதிர்க்கட்சியினர் முதல் அமைச்சர் நிதியத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம் என்றும் மேலும் தெரிவித்தார். இந்நியதிச் சட்டம் மாகாண சபையில் சட்டமாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மாகாண சபைச் சட்டம் 1987 இன் இல. 42, சரத்து 24 இன் படி "நிதி சம்பந்தமான நியதிச் சட்டமானால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கு முன் ஆளுநரின் உறுதிப்படுத்தல் பெறப்படல் வேண்டும்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தொடரும்)

# கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து இலங்கை வருவோரை தனிமைப்படுத்த மேலும் முகாம்கள்

(கொழும்பு)

**கொரோனா வைரஸின் தாக்கம் அதிகளவாகக் காணப்படும் தென்கொரியா மற்றும் இத்தாலியிலிருந்து இலங்கைக்கு வருபவர்களைக் கண்காணிக்க மேலும் பல முகாம்களைத் திறக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்தது.**

தற்போது வெளிநாடுகளில் இருந்து திரும்பி வருபவர்களைக் கண்காணிக்கும் வசதி அங்கொடை தொற்று நோய் வைத்தியசாலை மற்றும் தியத்தலாவை போன்ற இடங்களில் உள்ளது.

இதற்கு மேலதிகமாக இரண்டு அல்லது மூன்று இடங்களில் மேலும் பல முகாம்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியது. (இ-7)

## 22 மாணவர்களுக்கும் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

கைது செய்யப்பட்ட பிக்குகள் உட்பட 22 மாணவர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த 22 பேரையும் எதிர்வரும் 16 ஆம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்றுத் திங்கட்கிழமை உத்தரவிட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்னால், மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் நீதிமன்ற உத்தரவை மீறி செயற்பட்ட காரணத்தால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ருகுணு பல்கலைக்கழக உபவேந்தரை நீக்குமாறு கோரி கடந்த வியாழக்கிழமை முதல் இவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம் மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மக்களின் உரிமை மீது கைவைக்காதே! மோசடிக்காரர்களுக்குத் தண்டனை வழங்கு!

## மக்கள் சக்தியால் மட்டக்களப்பில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்



(ஏறாவூர்)

'அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை மீறுகின்றது. உரிமைகளை வென்றெடுக்கப் போராடுவோம்' என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரங்களை தேசிய மக்கள் சக்தி விநியோகித்து வருகிறது.

மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் இணைப்பாளர் சுந்தரேசன் தலைமையில் இந்தத் துண்டுப்பிரசுர விநியோகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு பொதுச்சந்தை சதுக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில், அதிகரிக்கப்பட்ட பொருட்களின் விலையைக் குறைக்கவும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவும் துண்டிக்கப்பட்ட ஓய்வூதிய கொடுப்பனவை உடனடியாக வழங்கவும் தோட்டத் தொழிலாளிகளின் சம்பளம் உட்பட சகல சம்பள அதிகரிப்பையும் வாக்குறுதியளித்தவாறு வழங்கவும் தகுதிக்கேற்றவாறு பட்டதாரிகள் உள்ளிட்ட தொழில் இல்லாத அனைவருக்கும் தொழில் வழங்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன், மக்களின் உரிமை மீது கைவைக்க வேண்டாம் எனவும் மக்களின் சொத்துக்களைச் சூறையாடிய பிணைமுறி மோசடிக்காரர் உள்ளிட்ட அனைவருக்கும் தண்டனை வழங்கும்படி அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

என்வே உரிமைகளை வென்றெடுப்பதற்காக கைகோர்த்து கொள்வோம், ஒன்றாக எழுந்து நின்று போராடுவோம் என அந்தத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## அனுமதியின்றி தங்கியிருந்த 5 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அனுமதியற்ற விதத்தில் தங்கியிருந்த 5 பேர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மேற்கொண்ட திடீர் சோதனையின் போதே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேலும் குறித்த சந்தேக நபர்களில் 4 பேர் சட்டவிரோத தரகர்கள் என பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் முதற்கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்தது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய பொலிஸ் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## தலதாமாளிகையில் ஜனாதிபதி வழிபாடு







(கண்டி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் திடீரென கண்டி தலதாமாளிகைக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தார். தலதாமாளிகையில் வழிபாடுகளை மேற்கொண்ட அவர், அங்கிருந்த சிறுவர்கள், பெற்றோர்களை சந்தித்துப் பேசியிருந்தார். கண்டிக்கான அவரது பயணம் திடீரென ஒழுங்கமைக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், தன்னுடைய பயணத்தின் போது சிறுவர்கள், பெற்றோர்களை சந்தித்து அவர்களுடன் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டமையானது தனக்கு சுவாரஸ்யமானதாக அமைந்திருந்ததாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள அவர், "இந்த நாட்டு பெற்றோர், எதிர்காலச் சந்ததி மற்றும் இளைஞர்களுடன் சந்தித்துக்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அவர்களின் எண்ணங்களைப் புரிந்து கொள்வதற்கான சிறந்த வாய்ப்பாக நான் கருதுகிறேன்" என ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)



யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற விசேட கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி மாணவர்களின் மாதிரிச் சந்தையின் போது...

# ராஜிதவின் கோரிக்கையை நிராகரித்த கோட்டா அரசு

## உடன் வெளியேற உத்தரவு




(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில் அவர் பயன்படுத்திய உத்தியோகபூர்வ இல்லத்தை மேலும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

தனது கோரிக்கையை அவர் பொது நிர்வாக அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனுக்கு எழுத்துபூர்வமாக விடுத்திருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், அவரின் கோரிக்கையை எந்த வகையிலும் ஏற்க முடியாது என்றும், உத்தியோகபூர்வ இல்லத்தை உடனடியாக ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தென்னக்கோன் தெரிவித்தார்.

ராஜித அவ்வாறு செய்யாவிட்டால், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் எச்சரித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் மூன்று மாதங்களுக்கும் மேலாக முன்னாள் அமைச்சர்கள் அனைவருக்கும் தங்கள் வாசஸ்தலங்களை விட்டு வெளியேற அரசாங்கம் அவகாசம் அளித்திருந்தாலும், ராஜித, தொடர்ந்து வாசஸ்தலத்தைப் பயன்படுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# "உயிர்ப்பு" கலைக்கண்காட்சி

(சாவகச்சேரி)

ஓவியரும் விரிவுரையாளருமான எஸ்.சண்முகராஜாவின் "உயிர்ப்பு" கலைக் கண்காட்சி சாவகச்சேரியிலுள்ள ரி.பி.ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக்கூடத்தில் நேற்று முன்தினம் தொடக்கம் இடம்பெற்று வருகிறது. இக் கலைக் கண்காட்சியின் மூன்றாம், நான்காம் நாள் நிகழ்வுகள் இன்று செவ்வாய், நாளை புதன் கிழமைகளில் ஓவியகூடத்தில் இடம்பெறும்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் என்.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் மூன்றாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபயின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானமும்,சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.சனாதனும்,கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் பொ.கமலநாதனும் கலந்து கொள்வர்.

நாளை புதன்கிழமை ஓவியக் கூடத்தின் பணிப்பாளர் திருமதி யோகமணி அழகரட்ணம் தலைமையில் நடைபெறும் நான்காம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.பரமானந்தமும்,சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ரீ.கருணலிங்கமும், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்புத்துறை விரிவுரையாளர் வ.பாலமுருகனும் கலந்து கொள்வர். (இ-30)

# இரு தையல் இயந்திரங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இயங்கும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்ற பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்த இரு மாணவிகளுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தையல் இயந்திரங்களை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ வழங்கினார்.

இந் நிகழ்வு நேற்று தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. (இ-7)

# பாடசாலைச் சீருடையில் பணம் வசூலிக்கத் தடை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பெருந் துடுப்பாட்டப் போட்டியான யாழ்.மத்திய கல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடை யிலான போட்டி நடைபெறும் நாட் களில் குறித்த இரு பாடசாலை யைச் சேர்ந்த மாணவர்கள் வீதி களில் பணம் சேகரிப்பதோ அல்லது கூட்டமாகச் செயற்படுவதோ தடை செய்யப்பட்டுள்ளதாக இரு கல்லூரி அதிபர்களும் அறிவித்தனர்.

நாளை மறுதினம் 5 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இப் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

குறித்த போட்டி இடம்பெறும் மைதானப் பகுதிகளில் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனை முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளதோடு மீறுவோருக்கு எதிராகப் பாதுகாப்புத் தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்வர் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஜ-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1992

### ரவன்




### வினு




### வர்ஷி




### மலர்




### றியாத்




### துஷ்யந்தன்

பெண்: ஹலோ இது கஸ்டமர் கேர் தானே?

கஸ்டமர் கேர்: ஆமாம் சொல்லுங்க மேடம்

பெண்: என் அஞ்சு வயசு பையன் சிம் கார்டு ஐ விழுங்கிட்டான்.

கஸ்டமர் கேர்: அப்படினா டாக்டர் கிட்ட கூட்டி கிட்டு போங்க மேடம்

பெண்: இல்லை அதுல 95 பைசா பேலன்ஸ் இருந்துச்சி. இவன் பேசும்போது காசு போகுமா சார்?

கஸ்டமர் கேர்: ?????

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## ரஞ்சனுடன் தொலைபேசியில் உரையாடிய
# நீதிபதிக்கு நீதிமன்றம் அழைப்பாணை!

(நுகேகொடை)

பணி இடை நிறுத்தம் செய்யப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நுகேகொடை நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியது.

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் தொலைபேசியில் உரையாடியதன் மூலம் அவருடன் சேர்ந்து பொய்ச் சாட்சிகளை உருவாக்க சதித் திட்டம் தீட்டியதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பிலேயே பணி இடை நிறுத்தம் செய்யப்பட்ட எம்பிலிப்பிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு சட்டமா அதிபரால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

எனினும் தன்னைக் கைது செய்வதைத் தடுத்து இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, கிஹான் பிலப்பிட்டிய மேன்முறையீட்டு நீதிமன்றில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இதனை ஆராய்ந்த நீதவான் நீதிமன்ற உத்தரவின்றி கிஹான் பிலப்பிட்டியவை கைது செய்ய முடியாது என்று அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கை வரலாற்றில் பெண் ஒருவர் நில அளவையாளர் நாயகமாக நியமனம்

(கொழும்பு)

நில அளவையாளர் நாயகமாக சியாமளி சித்ரலேகா பெரேரா கடந்த 21 ஆம் திகதி நியமனம் பெற்றார்.

கி.பி.1800ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் 220 வருட வரலாற்றில் , இவர் 1800லிருந்து கடமை புரிந்த நில அளவையாளர் நாயகங்கள் வரிசையில் 50 ஆவது இடத்தைப் பெறுகிறார்.

கொழும்பு தேவி பாலிகா வித்தியாலயத்தில் கல்வி கற்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற பின் தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவகத்தில் பட்டப்பின்படிப்பைத் தொடர்ந்து நில அளவைத் திணைக்களத்தில் இணைந்து கொண்டார்.

அதன் பின்னர் படிப்படியாக உயர்ந்து தனது 58ஆவது வயதில் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

இலங்கை வரலாற்றில் பெண் ஒருவர் நில அளவையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மூன்றாவது முறையாக
# துறைமுக அதிகார சபைக்கு விருது



(கொழும்பு)

இவ்வருடத்தின் சிறந்த துறைமுக அதிகார சபை மற்றும் துறைமுக உட்கட்டமைப்பு அபிவிருத்தி விருதினை இலங்கைத் துறைமுக அதிகார சபை பெற்றுக் கொண்டுள்ளது.

"Global Port Forum Awards 2020" என்ற ஜிபிஎப் விருது வழங்கல் நிகழ்வின் போதே அதிகார சபைக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்விருது வழங்கல் நிகழ்வு ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஹயட் ரிஜன்சி டுபாய் நகரில் இடம்பெற்றுள்ளதோடு, இவ்விருதை இலங்கைத் துறைமுக அதிகார சபை தொடர்ச்சியாக மூன்றாவது வருடம் பெற்றுக் கொண்டுள்ளமையும் விசேட அம்சமாகும்.

இதனைத் துறைமுக அதிகார சபை சார்பில் அதன் பௌதீக வள சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி பணிப்பாளர் உப்புல் ஜயதிஸ்ஸவும் இயக்க செயற்பாடு பணிப்பாளர் ஜயந்த பெரேராவும் பெற்றுக்கொண்டனர்.

கடந்த வருடம் உலகளாவிய ரீதியில் துறைமுக செயற்பாடுகளில் தரமான நிபுணத்துவ சேவைகளை மேற்கொண்ட நிறுவனங்களுக்காக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புத்தர் சிலை உடைப்பு விவகாரம் சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு





(கண்டி)

கண்டி - மாவனெல்லை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் புத்தர் சிலைகளை உடைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 32 பேரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

குறித்த சந்தேகநபர்களை நேற்று திங்கட்கிழமை மாவனெல்லை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதற்கமைய அவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு கண்டி, மாவனெல்லை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள புத்தர் சிலைகள் இனந் தெரியாதோரால் உடைத்து சேதமாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# செய்தித்துளிகள்

## சிவனொளிபாதமலையில் யாத்திரிகர் ஒருவர் மரணம்

(ஹற்றன்)

சிவனொளிபாத மலையைத் தரிசிக்க சென்ற நபர் ஒருவர் மாரடைப்பு காரணமாக மரணமடைந்துள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சிவனொளிபாதமலைக்கு யாத்திரை மேற்கொண்ட குறித்த நபருக்கு மாரடைப்பு ஏற்பட்டதையடுத்து, நல்லதண்ணி பொலிஸார் அவரை அவசர அம்புலன்ஸ் மூலம் மஸ்கெலிய மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கையெடுத்தனர்.

எனினும், வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு முன்பாகவே குறித்த நபர் மரணமடைந்தார்.

இவ்வாறு மரணமடைந்தவர் மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நாகந்தகெகரகே குணசேகர எனப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## ஐஸ் போதைப்பொருளுடன் புத்தளத்தில் ஒருவர் கைது



(புத்தளம்)

தம்பபண்ணி கடற்படையினர் மற்றும் புத்தளம் பொலிஸார் இணைந்து நேற்று முன்தினம் அதிகாலை புத்தளம் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வீடொன்றில் சோதனையில் ஈடுபட்டபோது 570 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில் வீட்டில் இருந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 110 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 140 | 110 | 160 |
| தக்காளி | 160 | 120 | 140 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 110 | 80 | 100 |
| கோவா | 80 | 120 | 120 | 110 | 120 |
| கரட் | 200 | 180 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 70 | 100 |
| புடோல் | 100 | 100 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 280 | 240 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 210 | 160 |
| பாகற்காய் | 180 | 150 | 160 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 70 | 140 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 70 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 | 160 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 150 | 120 | 120 | 110 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 250 | 400 |
| போஞ்சி | 150 | 140 | 120 | 110 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | — | 100 | 100 |
| கீரை-1பிடி | 40 | 50 | 60 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 70 | 60 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 60 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 160 | 160 | 130 | 150 |
| வெங்காயப்பூ | 150 | 150 | 140 | 90 | 200 |
| முள்ளங்கி | 50 | 50 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | — | 110 | 100 |




# அன்பின் மதிப்பு



குணசீலன் என்கிற அரசன் ஒருவன் நோய்வாய்ப்பட்டு, பல நாட்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனைப் பார்க்க தினமும் பல பிரமுகர்கள் வந்துகொண்டிருந்தனர்.

ஒருநாள், சில பெரிய மனிதர்கள் பலவித பழங்களைக் கொண்டு வந்து மன்னனிடம் கொடுத்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது, ஒரு விவசாயி தன்னைத் தடுத்த காவலாளிகளையும் பொருட்படுத்தாமல், மன்னனின் படுக்கையருகே வந்து நின்றான்.

அவனது கலைந்த தலைமுடியும், ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன் தன் கிராமத்திலிருந்து வெகுதூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதைத் அறிவித்தன.

அவன் மன்னனிடம் "அரசே... உங்கள் உடல் தேறவேண்டுமென்று எங்கள் ஊர் மாரியம்மனுக்குப் பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள். அம்மன் பிரசாதத்தைச் சாப்பிட்டால் எந்த நோயும் பறந்து ஓடிவிடும்" என்றான்.

அவன் பிரசாதத்தை வெளியே எடுத்ததும் அது கெட்டுப் போன நாற்றம் அடித்தது. அங்கிருந்த பிரமுகர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டார்கள். முகம் சுளித்தார்கள். அரசனோ, பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு, தன் கழுத்தில் இருந்த முத்துமாலையைக் கழற்றி எடுத்து, அந்த விவசாயிக்குப் பரிசளித்து அனுப்பினான்.

மன்னனுக்கு வேண்டிய பிரமுகர் ஒருவர், "அரசே, கெட்டுப் போன பொங்கலுக்கா முத்து மாலை பரிசு?" என்று கேட்டார். மன்னனோ, "அது கெட்டிருந்தாலும் அந்த பிரசாதத்தை நான் சாப்பிட்டுக் குணமடைய வேண்டும் என்று விரும்பி கள்ளங்கபடமற்ற மனதுடன் தன் கிராமத்திலிருந்து ஒரு வாரம் நடந்து வந்திருக்கிறான். அவனது அன்பு உண்மையானது. போலித்தனம் இல்லாதது. உண்மையான அன்புக்கு மதிப்பு மிக அதிகம். நான் அளித்த முத்துமாலைகூட அவனது அன்புக்கு ஈடாகாது" என்று கூறினான்.

நம்து அன்பு உண்மையாக இருந்தால், கடவுளே கையைக் கட்டிக் கொண்டு, நமக்கு சேவை புரிய வந்து நிற்பார்.

## விடுகதைகளும் விடைகளும்

• அவன் இல்லையேல் அவனியில் ஒன்றுமில்லை. அவனை நிரப்பலாம் பிடிக்க முடியாது. உணரலாம் காண முடியாது.

**காற்று**

• பாதாளத்தில் பிறந்தவன், பம்பரத்தில் சுழன்றவன், வெயிலில் காய்ந்தவன் - எல்லோர் வீட்டிலும் இருப்பவன்.

**பானை**

• ஒட்டை வாயனுக்கு விழுந்தபல் முளைக்கவில்லை.

**சீப்பு**

• ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை.

**அடுப்பு**

• உடல் உண்டு, தலை இல்லை. கை உண்டு, கால் இல்லை. அல்லும் பகலும் ஓடும் அது என்ன?

**சுவர்க் கடிகாரம்**

• பரட்டத்தலை மாமியாருக்குப் பவளம்போல் மருமகள்.

**இலந்தைப் பழம்**

• பள்ளிக்கூடம் போகிற பாப்பாவுக்குக் கையிலே ஒரு டை தலையிலே ஒரு டை.

**குடை, சடை**


• மாவிலே பழுத்த பழம், மக்கள் விரும்பும் பழம்.

**அப்பளம்**


• மஞ்சள் குருவி நெஞ்சைப் பிளந்து மகாதேவனுக்குப் பூசை ஆகுது.

**வாழைப்பழம்**

## புதிரைக் கண்டு பிடியுங்கள்




## புள்ளிக்கோட்டை இணைக்குக




●**பழமொழி:-** உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
**பொருள்:-** உனக்கு உதவி செய்தவரை என்றும் மறவாதே

●**பழமொழி:-** கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்.
**பொருள்:-** ஒரு மகா கவியின் தாக்கம் அவர் வீட்டில் உள்ள பொருட்களிலும் பயிலும் என்பது செய்தி.

●**பழமொழி:-** ஆண்டி மகன் ஆண்டியானால், நேரம் அறிந்து சங்கு ஊதுவான்.
**பொருள்:-** தந்தை தொழிலும் பழக்கமும் மகனுக்கு எளிதில் வரும்.

## உருவில் உள்ள 5 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



வெற்றியைவிட தோல்விதான்
அதிகப் படிப்பினைகளைச்
சொல்லிக் கொடுக்கிறது —கார்ல் மெனின்கர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சர்வதேசம் ஒன்றுதான் தமிழர்களுக்குத் தஞ்சம்

கங்கையில் நீராடுவதற்காகச் சென்ற இராம பிரான் கங்கைக் கரையில் அம்பை ஊன்றி வைத்துவிட்டு நீராடுகிறார்.

நீராடிய பின் நிலத்தில் ஊன்றிய அம்பை இழுத்து எடுக்கிறார். அந்தோ! அம்பில் குத்துப் பட்ட தேரை ஒன்று துடிக்கிறது.

இதனைக் கண்ணுற்ற இராமர் வேதனையுற்றார். தேரையைப் பார்த்து தேரையே, அம்பு தைத்தபோது நீ என்னிடம் முறையிட்டிருக்கலாமல்லவா? என்று கேட்டார்.

அதற்குத் தேரை கூறியது; இராமா! எனக்கு ஆபத்து ஏற்படும்போதெல்லாம் இராமா... இராமா... என்றுதான் சொல்லுவேன்.

ஆனால் இன்று அந்த இராமனே என்னைக் குத்தும்போது நான் யாரிடம் முறையிடுவது என்று கேட்டது.

ஆம், அந்தத் தேரையின் நிலையில்தான் நம் ஈழத் தமிழினமும் இருக்கிறது. சிங்களப் பேரினவாத சக்திகள் எங்களைத் தாக்கி வதைத்தபோதெல்லாம் இந்தியா எங்களைக் காப்பாற்றும், சர்வதேசம் எங்களைக் கைவிடாது என்றுதான் நம்பினோம்.

அதாவது இராமன் தன்னைக் காப்பாற்றுவான் என்று தேரை எங்ஙனம் நம்பியதோ அதேபோலவே தமிழ் மக்களும் அண்டை நாடான இந்தியாவையும் சர்வதேச நாடுகளையும் நம்பினர்.

ஆனால் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தத்தில், சர்வதேச சமூகத்தின் பங்களிப்போடு தமிழர்கள் வதை செய்யப்பட்டனர் என்றறிந்தபோது, இராமரின் அம்பினால் குத்துப்பட்ட தேரை போலவே தமிழ் மக்களும் இனி என்ன செய்வது என்ற வேதனையின் உச்சத்துக்குச் சென்றனர்.

இங்கு இராமரின் அம்பு தேரையைக் குத்தினாலும் அதனைக் காப்பாற்றக்கூடிய சக்தியும் இராமரிடமே இருக்கிறது.

ஆகையால் குத்துப்பட்ட வலியை மறந்து இராமா! என்னைக் காப்பாற்று என்று கேட்பதுதான் தேரைக்கான ஒரே வழி.

இதுபோலத்தான் ஈழத் தமிழர்களுக்கான உய்வினைக் கொடுக்கக்கூடிய ஒரே சக்தி அண்டை நாடான இந்தியா உள்ளிட்ட சர்வதேசம் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

ஆகையால், ஈழத் தமிழர்களாகிய நாங்கள் ஏமாற்றப்பட்டதை, எம் மீது போர்க்குற்றம் இழைக்கப்பட்டதை, ஐ.நா மனித உரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகளைக்கூட இலங்கை அரசு நிறைவேற்றாமல் காலம் கடத்துவதை, அதனை நிராகரிப்பதை சர்வதேசத்திடம் முறையிட வேண்டும்.

அப்போதுதான் எதிர்காலத்திலேனும் ஈழத் தமிழினம் அச்சமற்ற வாழ்வை, அடிமைத்தனமற்ற சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள சர்வதேச நாடுகளின் உதவியைப் பெற முடியும்.

இதுவிடயத்தில் சர்வதேசத்தை நாடுவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு எந்த வழியும் இல்லை.

# நாட்டின் அந்நியச் செலாவணியை கடற்றொழில் மூலம் அதிகரிக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூர் கடற்றொழிலாளர்களுக்கு நவீன தொழில் நுட்ப வசதிகளையும் சந்தை வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் கடற்றொழில் ஊடாக அந்நியச் செலாவணியை அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாக கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஆழ்கடல் கடற்றொழிலில் ஈடுபடும் பலநாள் கலன்களின் உரிமையாளர்கள் மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைநேற்று சந்தித்து தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைத்தனர்.

இதன்போதே மேற்கண்டவாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஆழ்கடல் தொழிலில் ஈடுபடுகின்ற மீன்பிடிப் படகுகளுக்கு வி.எம்.எஸ் மற்றும் ஆர்.எஸ்.டபிள்யூ வசதி ஏற்படுத்தித் தரப்படும் எனவும் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பின்போது 35 வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு கடந்த ஆட்சிக் காலத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் மீன்களை விற்பனை செய்வதற்கான கட்டுப்பாட்டு விலைகள் எவையும் நிர்ணயிக்கப்படாமையினால் இலங்கையை சேர்ந்த ஆழ்கடல் பலநாள் கலன்களின் உரிமையாளர்களும் பணியாளர்களும் பாதிப்பை எதிர்கொள்வதாக அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர், குறித்த விடயம் தொடர் பாக ஆராயந்து இலங்கை மீனவர்கள் நன்மையடையும் வகையிலான தீர்வினைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

அத்துடன் அனுமதி வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கான அனுமதி நிறைவடைகின்ற போது அவற்றை மீண்டும் வழங்குவது தொடர்பாக மீளாய்வு செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் மீன் வளம் அதிகரித்து காணப்படுகின்ற ஒக்டோபர் தொடக்கம் மார்ச் வரையான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்படும் மீன்களுக்கான வரியை அதிகரித்து உள்ளூர் மீனவர்களுக்கு நியாயமான வருமானத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக நிதி அமைச்சுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதங்கள் விநியோகிக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தில்

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளை தொழிலில் அமர்த்தும் செயற்திட்டத்தின்கீழ் தகுதி பெற்றவர்களுக்கு நியமனக் கடிதங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

தொழிலை எதிர்பார்ப்போர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட முதல் பட்டம் அல்லது அதற்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட டிப்ளோமா பாடநெறியை 2019.12.31க்கு முன்னர் நிறைவு செய்திருக்க வேண்டும்.

70,000திற்கும் மேற்பட்ட தொழில் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதில் 56,000 விண்ணப்பங்கள் அடிப்படை தகைமைகளுக்கேற்ப தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவ்விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டங்கள் மற்றும் டிப்ளோமா சான்றிதழ்களை உறுதி செய்துகொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டன. அறிவிக்கப்பட்ட விதிமுறைகளை பூரணப்படுத்தியிருக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட பின்னர் நியமனத்திற்கு 45,585 விண்ணப்பதாரிகள் தகுதி பெற்றுள்ளனர்.

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இலங்கை தபால் திணைக்களத்தின் ஸ்பீட் போஸ்ட் கூரியர் சேவை மூலம் அனுப்பப்பட்டுள்ளன. அனைத்து நியமனக் கடிதங்களுக்குமான விநியோகிப்பு பற்றுச் சீட்டினை தபால் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நியமனத்திற்கு பொறுப்பானவராவார். நியமனம் பெற்ற மூன்று நாட்களுக்குள் தமக்குரிய பிரதேச செயலாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும். நியமனக் கடிதம் கிடைத்து 07 நாட்களுக்குள் பயிற்சி நெறிக்கு சமுகம் தராதவிடத்து அந் நியமனம் இரத்து செய்யப்படும்.

ஒரு வருட பயிற்சிக் காலத்தில் ரூபா 20,000 கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சிக் காலத்தின் பின்னர் ஓய்வூதியத்துடன்கூடிய அரச நிரந்தர சேவையில் உள்வாங்கப்படுவர். மாவட்ட ரீதியாக நியமனம் வழங்கப்படுவதுடன், முதல் நியமனம் பெற்ற மாவட்டத்தில் 5 வருடங்கள் சேவையாற்றுவது கட்டாயமானதாகும். (ம)

## கலாவல்லி முன்பள்ளி அடிக்கல் நாட்டு விழா இன்று

தையிட்டி கலாவல்லி சனசமூக நிலையத்தின் முன்பள்ளி கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நிலையத்தின் தலைவர் வ.பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிவடக்கு பிரதேச செயலாளர் ச.சிவசிறி கலந்து கொள்ளவுள்ளார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன்தோப்பு, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, லிங் ரெடி மிக்ஸ் பிறைவேற் லிமிற்ரெட் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில** முகத்தாங்குளம் 2 ஆம் வட்டாரம், சாளம்பைக்குளம், பகல அளுத்வத்த கிராமம், கூமாங்குளம் கிராமம், கண்ணாட்டிகணேசபுரத்திலிருந்து பறயனாளங்குளம் வரை ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில** இசைமலைத்தாழ்வு, நரிக்காடு, நீலாமடுவிலிருந்து சிலாவத்துறையூடாக அரிப்பு வரை, வட்டுபித்தன் மடு, புதுக்காமம், கொக்குப்படையானிலிருந்து முள்ளிக்குளம் வரை, முள்ளிக்குளம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அழிவற்றது ஆன்மா



ஆராய்ச்சி அறிவு ஆகட்டும் மனதின் உணர்வுச் செயல்கள் ஆகட்டும் அவை குறுகிய எல்லைக்குட்பட்டவை.

மனித அறிவு சிறுவட்டத்திற்குள்ளேயே செயறபட முடிகிறது. அதை கடந்து போக முடியாது. அதைக் கடந்து செல்வதற்கான ஒவ்வொரு முயற்சியும் பயனற்றுப் போகிறது. ஆனால் அறிவாகிய இந்த வட்டத்திற்கு அப்பால்தான் மனித குலத்திற்கு மிகவும் பிரியமானவை எல்லாம் உள்ளன.

அழிவற்ற ஆன்மா உள்ளதா? கடவுள் இருக்கிறாரா? இந்தப் பிரபஞ்சத்தை வழிநடத்திச் செல்கின்ற மேலான சக்தி ஏதேனும் உண்டா? இத்தகைய கேள்விகள் எல்லாமே பகுத்தறிவு வட்டத்திற்கு அப்பாற்பட்டது. நமது சாதாரண அறிவால் அந்தக் கேள்விகளுக்கு விடை காண முடியாது.

அறிவு என்ன சொல்கிறது? நான் நம்பிக்கை அற்றவன் ஆம் என்றோ, இல்லை எனக்கும் எதுவும் தெரியாது என்றும் கூறுகிறது அது. ஆனால் இந்தக் கேள்விகள் நமக்கு மிகவும் முக்கியமானவை. இவற்றிக்கு சரியான விடை கிடைக்காவிட்டால் மனித வாழ்க்கை பயனற்றதாகிவிடும்.

நமது நீதிநெறிக் கொள்கைகள், நல்லொழுக்கங்கள் மட்டுமல்ல மானிட வாழ்வில் நல்லதாக, சிறந்ததாக உள்ள அனைத்துமே இந்த அறிவு வட்டத்திற்கு அப்பாலிருந்து கிடைத்த விடைகளிலிருந்து உருவாக்கப்பட்டவையே.

# சதுரங்கப்போட்டியில் வெண்மதி சம்பியன்



மருதங்கேணி பிரதேச செயலக 2020 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் மகளிருக்கான சதுரங்கப் போட்டியில் நாகர்கோவில் வெண்மதி விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தினை பெற்றுள்ளது.

பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நடைபெற்றுவரும் நிலையில் கடந்த சனிக்கிழமை மருதங்கேணி பிரதேச செயலக பொது மண்டபத்தில் சதுரங்கப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் நாகர்கோவில் வெண்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வத்திராயன் செல்வா விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் நாகர்கோவில் விளையாட்டுக்கழக மகளிர் அணி முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டது. (க-60)

# கபடிப் போட்டியில் மட்டக்களப்பு சம்பியன்





தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடம்தோறும் நடத்துகின்ற தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் 31 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா கடந்த 27 ஆம் திகதி வடமத்திய மாகாண விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

அந்த வகையில் நடைபெற்ற கபடி போட்டியின் இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியினர் முதலாம் இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

முன்னதாக 3 ஆம் இடத்தை தெரிவு செய்வதற்கான போட்டி இடம்பெற்றிருந்தது. இதில் பொலநறுவை மற்றும் அநுராதபுர அணிகள் மோதி அநுராதபுர அணி வெற்றிபெற்று மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டது.

அதனை தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட அணி மற்றும் அம்பாறை மாவட்ட அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டி இடம்பெற்றது.

இதில் 43 - 36 என்கின்ற புள்ளி அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட அணி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட அதேவேளை அம்பாறை மாவட்ட அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. (க-281)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# வெற்றி நிச்சயம் – 2021

அமரர்களான வெக்டர் பொ.வேலாயுதம், ஆ.மகாதேவன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடைபெறும்
மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

## உயிரியல் பாடத்தின் முதன்மைப் பெறுபேறுகள் - 2021 (உ/த) உயிரியல் பிரிவு

| சுட்டெண் | பெயர் | பாடசாலை | Marks | | | Averge Z | Rank |
|---|---|---|---|---|---|---|---|
| | | | Exam 4 | Exam 5 | Exam 6 | | |
| 213016 | Balendren Apiram | J/ Jaffna Hindu College | 96.66 | 96.30 | 95.50 | 2.2341 | 1 |
| 211008 | லோகேஸ்வரன் ஸ்ரீஹரீரன் | யா/ யாழ்ப்பாணக் கல்லூரி | 91.75 | 96.80 | 95.05 | 2.1553 | 2 |
| 213019 | Arulmoli Harshan | J/ Jaffna Hindu College | 94.00 | 93.20 | 87.70 | 2.0192 | 3 |
| 213507 | Kirthiga Ravishangar | J/ Vembadi Girls' High School | 91.53 | 90.20 | 91.50 | 1.9909 | 4 |
| 211522 | நிதுஷா உதயராஜ் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 86.83 | 94.40 | 91.30 | 1.9784 | 5 |
| 212554 | டிவின்சியா யோகராசா | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 83.21 | 96.24 | 89.30 | 1.9176 | 6 |
| 211508 | கார்த்திகா காண்டீபராசா | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 82.58 | 92.24 | 93.70 | 1.9127 | 7 |
| 213010 | Sivakonesan Sivamsan | J/ Jaffna Hindu College | 92.87 | 89.60 | 85.50 | 1.9091 | 8 |
| 212505 | சங்கவி ரவிக்குமார் | யா/ நெல்லியடி மத்திய கல்லூரி | 86.71 | 92.96 | 87.00 | 1.8861 | 9 |
| 212568 | சர்மினி ஜெயராஜா | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 83.79 | 91.00 | 88.70 | 1.8342 | 10 |
| 211693 | மவ்ஷாலி ரவி | க/ இந்து தேசிய கல்லூரி | 84.28 | 85.08 | 93.10 | 1.8168 | 11 |
| 213500 | Ashwinie Sivachandran | J/ Vembadi Girls' High School | 92.53 | 88.50 | 78.20 | 1.7716 | 12 |
| 212017 | ஸ்ரீலயேந்திரா சாதனன் | யா/ ஹாட்லி கல்லூரி | 89.17 | 86.64 | 82.00 | 1.7470 | 13 |
| 212566 | தனுஷ்கா சசிகரன் | யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | 75.54 | 90.08 | 90.90 | 1.7201 | 14 |
| 213001 | Thevananth Abiram | J/ Jaffna Hindu College | 83.08 | 84.30 | 88.20 | 1.7081 | 15 |
| 212001 | நித்தியஜோதி சஹீரராம் | யா/ ஹாட்லி கல்லூரி | 83.71 | 89.60 | 81.80 | 1.7024 | 16 |
| 213501 | Arani Sriskantharajah | J/ Vembadi Girls' High School | 88.25 | 82.80 | 83.40 | 1.6928 | 17 |
| 211033 | குணசேகரன் சாருஜன் | யா/ மானிப்பாய் இந்து கல்லூரி | 81.70 | 88.00 | 84.50 | 1.6866 | 18 |
| 213529 | Mayooraky Sureshkumar | J/ Kokuvil Hindu College | 88.78 | 84.20 | 80.10 | 1.6720 | 19 |
| 211517 | சங்கவி பாலசிங்கம் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 78.66 | 90.36 | 83.90 | 1.6654 | 20 |
| 211107 | குலநாதன் தார்மீகன் | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி | 78.13 | 84.84 | 89.77 | 1.6610 | 21 |
| 212567 | அபிநயா மனோராஜா | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 82.79 | 86.68 | 82.00 | 1.6441 | 22 |
| 211588 | மருதசகி சிவநேசன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 72.25 | 89.96 | 89.00 | 1.6350 | 23 |
| 213011 | Sivakumar Nisayeesan | J/ St. John's College | 81.50 | 84.60 | 84.40 | 1.6276 | 24 |
| 211547 | வைஷ்ணவி லோகநாதன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 80.16 | 86.50 | 83.20 | 1.6173 | 25 |
| 211665 | கீர்த்தனா இராஜமுகுந்தன் | யா/ யாழ்ப்பாணக் கல்லூரி | 80.25 | 80.48 | 88.70 | 1.6092 | 26 |
| 211607 | யதுஷா கனகரத்தினம் | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 78.46 | 90.16 | 80.50 | 1.6057 | 27 |
| 213012 | Kalaiselvan Keerththikan | J/ Jaffna Hindu College | 75.33 | 85.60 | 87.70 | 1.5952 | 28 |
| 213510 | Semparathy Puspasothy | J/ Jaffna College | 79.75 | 83.50 | 83.90 | 1.5739 | 29 |
| 212516 | விஷ்ணுஜி கதிரமலை | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 82.38 | 87.52 | 76.20 | 1.5598 | 30 |
| 212558 | ஹம்சவி உமாசங்கர் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 76.30 | 86.84 | 80.90 | 1.5240 | 31 |
| 211527 | கலைநிலா மதிவதனகுமார் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 74.38 | 84.96 | 83.80 | 1.5084 | 32 |
| 211005 | அருளழகன் வெற்றிதரன் | யா/ வட்டு இந்துக் கல்லூரி | 81.41 | 87.40 | 73.80 | 1.5046 | 33 |
| 212553 | சுவாங்கி தோமஸ்யூட் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 79.71 | 81.80 | 81.00 | 1.5007 | 34 |
| 211618 | கயல்விழி மகேஸ்வரநாதன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 78.45 | 84.64 | 77.70 | 1.4737 | 35 |
| 211657 | சுவர்ணா சச்சிதானந்தம் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 70.55 | 85.76 | 84.60 | 1.4715 | 36 |
| 212559 | வேணுஜா நந்தகுமார் | யா/ இடைக்காடு மகா வித்தியாலயம் | 76.88 | 83.20 | 79.60 | 1.4551 | 37 |
| 211617 | தரணிகா ஜோறம் அனசிலி | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 78.58 | 76.84 | 83.40 | 1.4410 | 38 |
| 211566 | அபிசாயினி சிவனேசன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 78.45 | 82.64 | 75.01 | 1.3997 | 39 |
| 211581 | சரணியா ஜெயபாலன் | யா/ புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி | 75.45 | 81.76 | 78.70 | 1.3948 | 40 |
| 212501 | மேரிலக்ஷிகா யுஸ்ரின்குருஸ் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 72.00 | 85.36 | 78.30 | 1.3899 | 41 |
| 211546 | ஸியானுகா பவளலிங்கம் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 70.63 | 77.48 | 87.50 | 1.3864 | 42 |
| 211513 | சிவனயா சிவகானந்தன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 66.21 | 89.96 | 78.20 | 1.3676 | 43 |
| 212005 | புவனேந்திரன் சயன் | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 72.30 | 80.60 | 77.80 | 1.3111 | 44 |
| 212555 | கிவிர்த்திகா விஜேந்திரன் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 70.38 | 77.52 | 82.00 | 1.2968 | 45 |
| 213535 | Ramiya Malarvannan | J/ Vembadi Girls' High School | 82.87 | 74.00 | 72.40 | 1.2929 | 46 |
| 211710 | துலாஞ்சலி சாய்பவன் | யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி | 66.29 | 79.88 | 83.00 | 1.2837 | 47 |
| 213006 | Arul Dino Sowmiyan | J/ St.Patrick's College | 75.33 | 77.00 | 72.90 | 1.2261 | 48 |
| 213515 | Jaeniefehr Murugathas | J/ Manipay Ladies' College | 70.20 | 74.90 | 80.10 | 1.2223 | 49 |
| 212530 | திருமகள் விநாயகமூர்த்தி | யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி | 72.41 | 75.44 | 77.10 | 1.2197 | 50 |
| 211641 | ஹர்சிகா கணேசராசா | யா/ வட்டு இந்துக் கல்லூரி | 70.74 | 69.08 | 85.10 | 1.2168 | 51 |
| 212569 | பைரவி சேந்தன் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 77.58 | 75.68 | 71.00 | 1.2118 | 52 |
| 211602 | விதுஸ்சனா மோகன்ராஜ் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 73.79 | 75.04 | 75.30 | 1.2075 | 53 |
| 213002 | Sathananthan Umesan | J/ Jaffna Hindu College | 74.95 | 75.00 | 74.10 | 1.2069 | 54 |
| 212511 | துவாரகா சிவகுமார் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 64.13 | 85.96 | 73.70 | 1.1996 | 55 |
| 211552 | நேஷாலினி மணிவண்ணன் | யா/ விக்ரோறியாக் கல்லூரி | 77.45 | 67.28 | 78.10 | 1.1873 | 56 |
| 213528 | Thamilmathy Thaneskumar | J/ Vembadi Girls' High School | 72.12 | 67.60 | 82.60 | 1.1764 | 57 |
| 213023 | Sivanesan Niruthbhavan | J/ Jaffna Hindu College | 76.83 | 71.10 | 74.00 | 1.1738 | 58 |
| 213531 | Sharangi Ganeshalingam | J/ Vembadi Girls' High School | 73.53 | 73.60 | 74.50 | 1.1679 | 59 |
| 211565 | கஜதீபா பாலச்சந்திரன் | கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம் | 67.37 | 72.20 | 82.10 | 1.1647 | 60 |
| 212014 | சரவணகுமார் றெனோஷன் | யா/ ஹாட்லி கல்லூரி | 70.80 | 73.68 | 75.90 | 1.1468 | 61 |
| 211023 | ஏகாந்தநாதன் தவசுதன் | யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி | 71.29 | 77.70 | 70.50 | 1.1341 | 62 |
| 211524 | அனிஷ்யா ரங்கன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 67.88 | 73.72 | 77.60 | 1.1267 | 63 |
| 211706 | ஜனனிகா விஜயரத்தினம் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 62.16 | 74.72 | 82.30 | 1.1235 | 64 |
| 212024 | குணேஸ்வரன் கலாகேசவன் | யா/ ஹாட்லி கல்லூரி | 67.80 | 75.40 | 75.60 | 1.1208 | 65 |
| 211022 | மகேந்திரன் சந்தோஷ் | யா/ யாழ் இந்து கல்லூரி | 73.28 | 87.70 | 57.35 | 1.1194 | 66 |
| 211521 | மிதுலா உருத்திரமூர்த்தி | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 63.13 | 75.52 | 80.10 | 1.1174 | 67 |
| 212576 | பிரியங்கா வெற்றிவேலாயுதம் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 75.71 | 77.00 | 64.40 | 1.0990 | 68 |
| 211091 | கெங்கேஸ்வரன் மதுசங்கர் | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 69.75 | 67.92 | 79.20 | 1.0897 | 69 |
| 211004 | ஜெகரட்ணம் உமாசுதன் | யா/ யாழ்ப்பாணக் கல்லூரி | 65.83 | 73.50 | 77.14 | 1.0827 | 70 |

☞ ஆங்கிலமொழி மூலப் பரீட்சார்த்திகளின் விபரங்கள் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளன.

☞ பரீட்சைக்குத் தோற்றிய ஏனைய மாணவர்களின் பெறுபேறுகளை அறிய விரும்பும் பெற்றோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பரீட்சை இணைப்பாளர்கள் யாழ்ப்பாணம் - +94777917611 வடமராட்சி - +94778884068 (C-9388)

**New Science Hall**
Kannathiddy, Jaffna

**Beacon Study Centre**
Vathiry, Karaveddy

## படுகாயமடைந்த...

திலீபன் (வயது-46) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 26ஆம் திகதி காங்கேசன்துறையிலிருந்து யாழ்.நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றபோது, தெல்லிப்பழையில் நடந்து சென்ற பெண்ணோடு மோதியதில் படுகாயமடைந்த குறித்த நபர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

## வீதி விபத்து...

ந்த குடும்பத் தலைவி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியைச் சேர்ந்த ஜேம்வலண்டன் ஜெகதீஸ்வரி (வயது-42) என்பவரே உயிரி ழந்தவராவார்.

கடந்த 20ஆம் திகதி அன்று குருநகர் வீதியைக் கடக்க முற்பட்டவேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாய மடைந்த குறித்த பெண் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

## கோட்டாவின்...

முதல்வர் ஆனல்ட் எடுத்துரைத்துள்ளார்.

யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்டுக்கும் இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டின் தூதுவர் எரிக் லவுற்றுக்கும் (Eric Lavertu) இடையில் விசேட சந்திப்பு நேற்று மாநகர முதல்வர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பு குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட முதல்வர், பிரான்ஸ் நாட்டின் நிதி உதவியில் மாநகரத்தில் செயற்படுத்தப்படவுள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இது தொடர்பில் ஏற்கெனவே இடம்பெற்ற முன்னேற்றங்கள் தொடர்பிலும் ஆராயப் பட்டதாக குறிப்பிட்டார்.

மேலும் முன்னைய அரசின் காலப்பகுதியில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நகர்வில், முயற்சிகள், மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் குறித்து தூதுவர் வினவியதுடன், தற்போதைய அரசின் நகர்வுகள் தொடர்பிலான நிலைப்பாட்டையும் கேட்டறிந்தார்.

அதற்கு முதல்வர் கடந்த அரசின் காலப் பகுதியில் யாழ் மாநகரப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விளக்கியதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சியினால் நாம் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் அமைக்கப்பட்டுவரும் மாநகர சபை கட்டட பணிகள் தொடர்பிலும் நெடுந்தூர பயணங்களுக்கான பேருந்து நிலைய அபிவிருத்தி தொடர்பிலும் கடந்த மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமைக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

தொடர்ந்து முன்னைய அரசின் காலத்தில் இருந்த ஜனநாயக நிலை தொடர்பாகவும், தற்போதைய அரசின் ஆட்சிக் காலத்தில் நிலவும் ஜனநாயக நிலை தொடர்பாகவும் தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள், எவ்வாறான நிலை காணப்படுகின்றது என தூதுவர் வினவினார்.

அதற்கு முதல்வர் கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்தது போன்ற ஜனநாயகம் தற்சமயம் இல்லை. குறைவாகவே காணப் படுகின்றது. இந்தியப் பிரதமரைச் சந்தித்த பிறகு அரசு வெளியிட்ட அறிக்கை முதற் கொண்டு அரசினுடைய தற்போதைய செயற் பாடுகள் வரை அதனை வெளிக்காட்டி நிற் கின்றார்.

உதாரணமாக அண்மையில் 100 000 வேலைவாய்ப்புக்களை வழங்கும் நேர்முகத் தேர்வில் இராணுவத்தினரின் பங்கேற்பு குறித்து விளக்கினார், விமான நிலையத்திற்கான உத்தியோகபூர்வ பாதையை பயன்படுத்த முடியாத நிலைக்கான காரணம், இராணுவ வசமுள்ள மிகுதிக் காணிகள் விடுவிக்கப்படாமை குறித்தும் விளக்கினார்.

மேலும் இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் மாநகரத்தில் அமைக்கப்பட்டுவரும் கலாசார மையத்தை மத்திய அரசின் கீழ் கொண்டு செல்வது தொடர்பில் வெளியிடப்பட்டிருந்த கருத்துக்கள் தொடர்பிலும் இதன் போது முதல்வர் தனது கண்டிப்புடன் கூடிய கருத்துக்களை தூதுவருடன் பகிர்ந்து கொண்டார்.

தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாத்திரமே அரசு பேச முடியும் என்றும் எமது நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் தீர்வு வழங்குவதிலிருந்து விலக முடியாது என்றும் தூதுவருக்கு மக்களின் எதிர்பார்ப்பு தொடர்பில் விரிவான விளக்கமொன்றை வழங்கியிருந் தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தூதுவருடனான இச் சந்திப்பில் மாநகர ஆணையாளர், மாநகர செயலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தமையும் விசேட அம்சமாகும். (ம-18)

## பொதுத் தேர்...

8ஆவது பாராளுமன்றை நேற்று மார்ச் 2ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கும் ஆணையை அறிவிக்கும் ஜனாதிபதியின் அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்புக் கிடைத் துள்ளதாக அரச அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

"9ஆவது பாராளுமன்றத்தை தெரிவு செய்யும் பொதுத் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி மார்ச் 19ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைகிறது.

அத்துடன், 9ஆவது பாராளுமன்றின் முதலாவது அமர்வு மே 14ஆம் திகதி ஆரம்பமாகும்" என்று தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது. (ம)

## சுமந்திரனின்...

லாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

"எங்களுக்கு ஆசனங்கள் கிடைக்கவில்லை என்றோ சுயலாபங்களுக்காகவோ, நாங்கள் கூட்டமைப்பை விட்டு வெளியேறவில்லை. தற்பொழுது தேர்தலை மையப் படுத்தி பொய்யான பரப்புரைகளை சுமந் திரன் பரப்பி வருகிறார்.

கடந்த அரசாங்கத்துடன் சுமந்திரன் எவ்வாறு ஒத்து செய்யப்பட்டார், எவ்வளவு தூரம் ரணில் விக்கிரமசிங்கவுடைய அரசாங்கத்தை பாதுகாக்க முயற்சித்தாரென்று அனைவருக்கும் தெரியும். எனவே யாருடைய முகத்திரையை கிழிக்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள் என் றும் அவர் கூறினார். (ம)

## மாவீரர்களின்...

உரிமைக்காகப் போராடுவதைப் பயங்கரவாதம் என்று குறித்த நபர் கூறப் போய் உலகெங்கணும் உருவாகும் உரிமைப் போராட்டங்களை அந்நபர் கொச்சைப்படுத்தி விட்டார்.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி தொண்டமானாறு, கெருடாவில் மாவீரர் கோவிலடி குடியிருப்பு அருகில் நேற்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

தமிழர்களின் இன்றிருக்கும் முக்கிய கட்சி அன்றைய அரசாங்கக் கட்சிக்குப் பின்னால் சலுகைகளுக் காக சரணா கதி அடைந்ததால் இன்று அக் கட்சியால் தமிழ் மக்களின் பல தேவைகளையும் அவற் றிற் காகப் போராட முடியாத நிலையில் அது தத்தளிக்கின்றது.

அரச பயங்கரவாதமே எமது சாதுவான இளைஞர் யுவதிகளை ஆயுதமேந்த வைத்தது என் பதை அவர் மறந்துவிட்டார் போல் தெரிகிறது. உரிமைக்காகப் போராடுவதை பயங்கரவாதம் என்று குறித்த நபர் கூறப் போய் உலகெங்கணும் உருவாகும் உரிமைப் போராட்டங்களை அந்நபர் கொச்சைப் படுத்திவிட்டார்.

அது ஒரு புறமிருக்க எமது கட்சி பற்றிய ஒரு விளக்கத்தை அண்மையில் யாழ் ஊடக அமைய கேள்விகளின் போது வெளியிட்டிருந் தேன். அதாவது, எமது புரிந்துணர்வு உடன் படிக்கையை நாம் வெளியிட்டுள்ளோம்.

அதில் எமது செயற்பாடுகள் எவ்வாறு இருக்கப் போகின்றன என்பது பற்றி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். இவை வெறும் வார்த்தைகள் அல்ல. கூட்டமைப்பு செயற்பட்டது போல தமிழ் மக்களின் எதிர்காலத்தை தனி ஒருவர் தீர்மானிக்கும் வகையில் நாம் செயற் படமாட்டோம். உலகம் பூராகவும் பரந்து வாழும் எமது மக்கள் மத்தியில் பல மேதைகளும் அறிஞர்களும் இருக்கின்றார்கள். அவர்களை எல்லாம் உள்வாங்கி நாம் செயற்பட வேண்டும். நன்கு ஆராயப்பட்ட உத்திகளின் அடிப்படையில் நாம் செயற்பட வேண்டும். அவற்றை நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற் பாடுகளின் ஊடாகவே நாம் முன்னெடுக்க முடியும். அதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். தாமதம் ஆனாலும் இவற்றை நாம் செய்வதற்கு திட சங்கற்பம் பூண்டிருக்கின்றோம். அரசாங்கத் தில் தங்கி இருக்காமல் எமது அபிவிருத்தியை எப்படி நாம் முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பிலும் அறிஞர்கள், புத்திஜீவிகளை ஒன்றிணைத்து எமது அரசியல் ராஜதந்திர செயற்பாடுகளை எப்படி முன்னெடுக்கலாம் என்பது தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

ஆகவே எமது அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளுக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பை போல அரசாங்கங்களிடம் சரணாகதி அடைந்து மண்டியிடாமலும் தனி ஒருவரின் மூளையில் தங்கியிராமலும் நிறுவனமயப்படுத்திய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நாம் முயற்சிக்கின்றோம். இந்த அடிப்படையிலேயே இணைந்த வடக்கு கிழக்கில் சுயநிர்ணய உரிமைகள் அடிப் படையிலான தீர்வை அடைவதற்கான எமது அணுகுமுறை வேறுபடுகிறது. எமது அபி லாசைகளை வென்றெடுப்பதற்கான இந்த அணுகுமுறையில் அடிப்படையாக நாம் ஏனைய அரசியல் கட்சிகளில் இருந்து வேறு படுகின்றோம்.

அதாவது, வெறும் வார்த்தை ஜாலங்களால் தமிழ்த் தேசியம் மலரும் என்று நாம் நினைக்கவில்லை. மற்றவர்கள் மீது சதா குற்றம் சொல்லி வருவதால் தமிழ்த் தேசியம் மலரும் என்று நாம் நினைக்கவில்லை. அல்லது அரசிடம் மண்டியிடுவதால் தீர்வு வரும் என்றும் நாம் நம்பவில்லை. அத்துடன் தனி ஒருவரின் புத்தியும் உழைப்பும் மட்டும் பலாபலன்களைக் கொண்டுவரும் என்றும் நாம் நம்பவில்லை. இந்த அடிப்படையில் தான் நாம் எம்மை ஒரு மாற்று அணியாகக் காண்கின்றோம். எமது தாரக மந்திரம் வித்தியாசமானது. அரசியலில் தன்னாட்சி, சமூக ரீதியாக தற்சார்பு, பொருளாதாரத்தில் தன்னிறைவு காண்பதே எமது குறிக்கோள். நீங்கள் எமது தனித்துவத்தை தெளிவாகப் புரிந்து கொண்டு எம்மை அடையாளம் கண்டுகொள்வீர்கள் என்று நம்புகின்றேன். எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை நாம் தயாரித்து வருகின்றோம். விரைவில் வெளியிடுவோம் என்றார். (ம)


மெகா பவர்
திகதி 2020/03/02
சீட்டிழுப்பு இலக்கம் 505
S 18 02 07 61 69

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/03/02
சீட்டிழுப்பு இலக்கம் 1509
11 03 27 50 52 68 29

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 02-03-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2409
G 23 26 29 62

மஹஜன சம்பத
திகதி 2020/03/02
சீட்டிழுப்பு இலக்கம் 4126
C 7 1 4 3 6 6

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1137
சீட்டிழுப்பு திகதி 02.03.2020 திங்கள்
N 15 18 23 71
ரூ.98,540,284
8 4 6 2

ராசி
திகதி 02.03.2020 வெற்றி வாரம் 2786 வர்ணம் மஞ்சள்
மேடம் 07 15 21 39 ரூ. 2,193,294

டபுள் சான்ஸ்
ரூ.500 பரிசுக்குரிய 5489
ரூ.100 பரிசுக்குரிய 414
2020.03.03 செவ்வாய் சிவப்பு

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 900 இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,203,320/-
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.03.02
25 34 59 72 C

சனிக்கிழமை அதிர்ஷ்டம் ශනිදා වාසනාව
சீட்டிழுப்பு இல: 3308 சீட்டிழுப்பு திகதி: 2020.03.02
நீலம் திங்கட்கிழமை
02 05 69 70 C
35,978,228/-

# ஐ.தே.கவின் இயலாமையே

# மாற்று அணி உருவாக காரணம்

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய தேசிய கட்சி தலைமைத்துவத்தின் இய லாமையே ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்படக் காரணம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, புதிய கூட்டணிக்கான தலைவர் மற்றும் செயலாளரை நியமித்து அனைத்து அதிகாரங்களை யும் வழங்கிய பின்னர் தற்போது முரண்பாடுகளை உண்டாக்குவது சிறந்ததல்ல என்றும் கூறினார்.**

பாராளுமன்ற குழு அறையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஐ.தே.க. செயற்குழு கூட்டத்தில் முறையான வாக்கெடுப்பொன்று இடம்பெறவில்லை. வாக்கெடுப்பு நடத்தப்படவிருந்தால் அதனை உத்தியோகபூர்வமாக அறிவித்து அனைவரும் பங்குபற்ற வேண்டும் என்று அறிவிக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு அழைப்பு எதுவும் விடுக்கப்படவில்லை. செயற்குழுவில் வாக்கெடுப்பு நடத்தப்படும் போது மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்ற வேண்டியது அத்தியவசியமானதாகும். எனினும் அதுவும் இடம்பெறவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கேற்ப செயற்படும் கூட்டணியாகும். இது தொடர்பில் ஐ.தே.க. பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் கடந்த ஜனவரி 30 ஆம் திகதி உத்தியோக பூர்வ ஊடக அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தார். அதில் பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளர், போட்டியிடும் கூட்டணியின் தலைவர் மற்றும் வேட்புமனு சபையின் தலைமைத்துவம் என்பவற்றிற்கு ஐ.தே.க வின் பிரதி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு வழங்க செயற்குழுவில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிய கூட்டணியின் பொதுச் செயலாளரை தெரிவு செய்யும் அதிகாரமும் அவருக்கே வழங்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.தே.க.வின் பெரும்பாலான உறுப்பினர்கள் எனது தலைமையில் பொதுத் தேர்தலில் போட்டியிட விரும்புவதாகக் கோரியதால் நான் கேட்காமலேயே செயற்குழுவில் மேற்கூறிய அதிகாரங்கள் கிடைக்கப்பெற்றன. இந்நிலையில் கூட்டணியை ஸ்தாபித்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் போது பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முறையான நடைமுறைப் படுத்தப்படாததன் காரணமாகவே இந்த சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த மக்களை சந்திப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட கூட்டங்களை இரத்து செய்ய வேண்டியதாயிற்று.

தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு கூறி, அந்த பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் என்னிடம் வழங்கி தற்போது சின்னம் பிரச்சினை என்று கூறுகிறார்கள். ஆனால் உண்மையில் சின்னம் தொடர்பில் எந்த பிரச்சினையும் இல்லை. யானை, அன்னம் அல்லது வேறு எந்த சின்னமானாலும் நாம் இணக்கம் தெரிவித்தோம். சின்னம் ஒன்றை தெரிவு செய்தாலும் தேர்தலுக்கு முன்னர் அதில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் எவ்வித சிக்கலும் கிடையாது.

அனைத்து அதிகாரங்களையும் எனக்கு வழங்கிய போதிலும் சின்னம் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரத்தை அவர்கள் வைத்துக் கொண்டார்கள். உண்மையில் கட்சி தலைவர், பொதுச் செயலாளர் இருக்கும் போது தேர்தல் நடவடிக்கைகளுக்காக பிறிதொரு தலைவரோ செயலாளரோ நியமிக்கப்படத் தேவையில்லை. எனினும் தேர்தல் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக அந்த பொறுப்புக்கள் எம்மிடம் வழங்கப்பட்டன.

யானை மற்றும் அன்னம் சின்னத்தை வழங்குவதில் சிக்கல் இருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் தான் இந்த சின்னங்களை பரிந்துரைத்தார்கள். தற்போது அவர்களே அதனை நிராகரிக்கின்றார்கள்.

எவ்வாறிருப்பினும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி போட்டியிடும் சின்னம் தொடர்பில் நாம் வெகுவிரைவில் சரியான தொரு தீர்மானத்தை எடுப்போம் என்றும் கூறினார். (ம)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (2362)

தொடர்பு: றாஜ் - 077 679 6623


## மரண அறிவித்தல்

### திருமதி ஏகாம்பரம் பவானி (ரதி)



**மண்டைதீவு, 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 217, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக்கொண்ட திருமதி ஏகாம்பரம் பவானி அவர்கள் நேற்று (02.03.2020) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்தார்.**

**அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - யோகம்மா தம்பதிகளின் புதல்வியும், ஏகாம்பரத்தின் அன்பு கணவரும், பொன்னையா - பொன்னாச்சி தம்பதிகளின் மருமகளும், தவமலர் (ஸ்ரீ), சுகதா (வலம்புரி), உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் மங்கையற்கரசி, அமரர் மகேஸ்வரி (சித்திரம்), அமரர் ஆனந்தநடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மோகனராஜா, பாலுமதியின் அன்பு மாமியாரும், அபிராம், ஆரபி, ஹரிராம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், அமரர் இராசரத்தினம், அமரர் இராமசாமி மற்றும் சிவசோதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2020) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

217, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (C-9397)

தகவல்: குடும்பத்தினர்
தொடர்பு: 0779114634, 0773839650, 0771154249


**மருதங்கேணியில் வேலை வாய்ப்பு**

மருதங்கேணி உட்பட எமது கிளைகளில் வேலை செய்ய விரும்புபவர்களுக்கு உடனடி வாய்ப்புக்கள்.



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (C-9340)

சம்பளம் பயிற்சியின் போது 10000/- பயிற்சியின் பின்னர் - 15000/-

V2 TRAVELS 0768226243



**சாரதி - உடனடி வேலைவாய்ப்பு**



எமது நிறுவனத்திற்கு முழுநேரமாக கார்,ஆட்டோ மோட்டார் சைக்கிள் போன்றவற்றில் பொதிகள் ஏற்றிச்செல்லக்கூடிய, பகுதிநேரமாக அலுவலகத்தில் வேலை செய்யக்கூடியவர் தேவை. வேலை அனுபவம் மற்றும் கல்வியறிவு எதிர்பார்க்கப்படுகிறது.

(C-9340) சம்பளம் - 25'000/=

V2 TRAVELS 0768226243



**பணிப்பெண் தேவை**

திருநெல்வேலிப் பகுதியிலுள்ள குடும்பம் ஒன்றிற்கு வீட்டுவேலைக்கு நம்பகரமான ஆள்தேவை நாட் சம்பளம் - 700/=) தங்கி நிற்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 891 8300 (2445)



**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்) (C-9393)



**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK-550*/=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

0768226240 V2 TRAVELS (C-8785)



**நெல்லியடியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

| | |
|---|---|
| லண்டன் - 540/= | கனடா - 950/= |
| ஜேர்மனி - 640/= | நெதர்லாந்து - 690/= |
| இத்தாலி - 690/= | |

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-9381)



**கணக்கீடு**

A/L Day Class கம்பனி ஆரம்பம் நாளை 3 PM
(திங்கள் - வெள்ளி வரை வாரம் 10 மணிநேர வகுப்பு)

- அலகு ரீதியான கருத்தரங்கு ஒவ்வொரு செவ்வாய் 3 PM (மாதக்கட்டணம்.300 ரூபாய் மட்டும்)
- வெளிமாணவர்களும் பங்கு பற்றலாம்
- முதல்தரம் விட்ட தவறுகளை முழுமையாக மாற்றுவோம்
- புதிய பாடத்திட்டத்தில் புதிய சாதனைகள் என் மாணவர் யாழ் நிலை 1,2 மற்றும் தொடர்நிலைகள்
- நியாயமான கட்டணம் தரமான சேவையில்

S.தவா DCM(N) யா/வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை தொடர்பு - 077 239 5858 (C-9396)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.